இனிது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | கார்த்திகை 06 | வியாழக்கிழமை 22.11.2018 | கதிர் 17

தென்னிலங்கையில் இப்போது சூடு பிடித்திருக்கும் அரசியல் குழப்பங்களுக்கு மத்தியிலும் ஓரளவு திடமாக நிற்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

அவரது தரப்பில் அரசியல் வியூகங்களை வகுக்கும் – அல்லது கையாளும் – சாணக்கியராக நோக்கப்படுபவர் பக்கம் 02 »

# மாவீரர் நினைவேந்தலைத் தடுக்க யாழ்.நீதிமன்றத்தில் பொலிஸ் மனு!

## நாளை கட்டளை வழங்கப்படும் என அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 22

பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளன. அந்த நிகழ்வுகளைத் தடுப்பதற்குக் கட்டளை வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கோப்பாய் பொலிஸார் நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

மனு மீதான கட்டளை நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படும் என யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் அறிவித்தார். பக்கம் 11 »

## கனடா தூதுவர் - நாமல் எம்.பி. டுவிட்டரில் கருத்து மோதல்!

கொழும்பு, நவ. 22

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையே டுவிட்டரில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. பக்கம் 11 »

## நாடாளுமன்றக் கலரி நாளையும் மூடப்படும்

கொழும்பு, நவ. 22

நாடாளுமன்றப் பார்வையாளர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பார்வையாளர் பகுதி நாளை பக்கம் 11 »

## சம்பந்தனைப் போன்றே நாமும் நடக்கின்றோம்

### மஹிந்த அணி விளக்கம்

கொழும்பு, நவ. 22

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தனது மக்களுக்காகத் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பது போன்றே நாமும் பக்கம் 11 »

## தாயகமெங்கும் மாவீரர் வாரம் உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்



யாழ்ப்பாணம், நவ. 22

தமிழர் தாயகமெங்கும் நேற்று மாவீரர் வாரம் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது. வடக்கு – கிழக்கில் பல இடங்களில் நேற்று மாவீரர் வார ஆரம்ப நாள் நிகழ்வுகள் அமைதியாக நடைபெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் பக்கம் 11 »

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை உறுதிப்படுத்தியுள்ளது 'ஹன்சார்ட்'

### மஹிந்த தரப்புக்கு மேலும் சிக்கல்

கொழும்பு, நவ. 22

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசைப் பதவியில் இருந்து நீக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கடந்த 14ஆம் திகதியும், 16ஆம் திகதியும், நிறைவேற்றப்பட்டதை உறுதி செய்யும் நாடாளுமன்றப் பதிவேடு (ஹன்சார்ட்) அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இதனால் மஹிந்த தரப்புக்கு மேலும் பக்கம் 02 »

## சதிகாரர்களின் சர்வாதிகாரத்தை சில தினங்களுள் அடக்குவோம்!

### ஐ.தே.க. மீண்டும் அரியணை ஏறும் என ரவி திட்டவட்டம்



கொழும்பு, நவ. 22

சதிகாரர்களின் சர்வாதிகார ஆட்சிக்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். பெரும்பான்மைப்பலம் இல்லாமல் போலியான ஆட்சியை நடத்தும் மைத்திரி – மஹிந்த அணியினருக்கு சில தினங்களுக்குள் பக்கம் 11 »

## இரத்தினக்கல் சின்னத்தில் வருகிறது புதிய கூட்டணி

### வியூகம் வகுக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 22

இரத்தினக்கல் சின்னத்தில் ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட பல கட்சிகளின் பாரிய கூட்டணி ஒன்றை அமைத்து அடுத்து தேர்தலில் பக்கம் 11 »

## பதவி துறந்த வசந்த மீண்டும் அமைச்சரவைக் கூட்டத்திலா?

### இல்லை என்று தகவல்



கொழும்பு, நவ. 22

மஹிந்த தரப்பின் அமைச்சுப் பதவியைத் துறந்து மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டார் எனக் பக்கம் 11 »

## ஐ.தே.கவினரின் அடுத்த 'செக்' மஹிந்தவின் அமைச்சர்களுக்கு

### மற்றொரு பிரேரணை நேற்றுச் சமர்ப்பிப்பு

கொழும்பு, நவ. 22

மஹிந்த ராஜபக்ஷ அரசின் அமைச்சர்கள் மற்றும் அவர்களின் அதிகாரிகளுக்கான ஊதியம், மற்றும் பிற சலுகைகள், வசதிகளை இடைநிறுத்துவது தொடர்பான பிரேரணை ஒன்றை ஐக்கிய தேசிய முன்னணி நேற்றுச் சமர்ப்பித்துள்ளது. பக்கம் 11 »

## மைத்திரி – மஹிந்த கூட்டணிக்கு எதிராக தம்பர அமிலதேரர் சத்தியாக்கிரகப் போர்!

### ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் வலியுறுத்து




கொழும்பு, நவ. 22

மைத்திரி – மஹிந்த கூட்டணி அரசின் செயற்பாடுகளை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. குறைந்தபட்சம் மாலைதீவு, சுவாசிலாந்து நாடுகள்கூட இந்த அரசை ஏற்குமோ தெரியாது. நாட்டில் ஜனநாயகம் – நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதற்காகவே சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம்.

– இவ்வாறு வண. தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால பக்கம் 11 »

## கூட்டமைப்பின் நடுநிலை மஹிந்தவுக்கு ஆதரவாகாது

### கூறுகிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், நவ. 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் நடுநிலை வகிக்க வேண்டும் எனக் கேட்பது மஹிந்தவுக்கு ஆதரவான நிலைப்பாடாக ஒருபோதும் அமையாது எனத் தமிழ்த் தேசிய மக்கள் பக்கம் 11 »

# நீதிபதியின் மெய்ப்பாதுகாவலரின் கொலைச் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டதை ஆட்சேபிக்கும் மனு மீது விசாரணை முடிவு

## திங்களன்று தீர்ப்பு வழங்கப்படும்

மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் உப பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரா சுட்டுக்கொலை செய்யப்பட்ட வழக்கின் சந்தேக நபர் மூவருக்கும் நேற்றுமுன்தினம் பிணை அனுமதி வழங்கப்பட்ட நிலையில், மன்றின் கட்டளையை மறுஆய்வு செய்யவேண்டும் என்று அரச சட்டவாதி ஊடாக யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று ஆட்சேபனை விண்ணபத்தை முன்வைத்தனர். யாழ்ப் பாணம் மேல் நீதிமன்று நேற்று அதனை விசாரித்தது. மனு மீதான தீர்ப்பு 26 ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்படும் என நீதிமன்றம் அறிவித்தது.

மேல்நீதிமன்றம் பிணை அனுமதிக் கட்டளை வழங்கிய பின்னர் அரச சட்டவாதி சீராய்வு விண்ணப்பத்தை சமர்பித்தமையை சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தா கடுமையாக ஆட்சேபித்தார். அவர் மன்றில் நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த மன்று அரச சட்டவாதியின் விண்ணப்பத்தை ஒத்திவைத்தது. அத்துடன், அரச சட்டவாதி ஊடாக ஆட்சேபனை விண்ணப்பத்தை முன்வைத்த யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியை வரும் 26ஆம் திகதி மன்றில் முன்னிலையாக உத்தரவிட்டு பிணை விண்ணப்பத்தை அன்று வரை ஒத்திவைத்தது.

“மேல் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் அவரது மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகத்தர் சுட்டுக் கொல்லப்பட்டார். எனவே மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதா? என்று விசாரணைகளை முன்னெடுக்கின்றோம். எனவே சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டால் விசாரணைகள் பாதிக்கப்படும்.

“அத்துடன், பொலிஸ் உத்தியோகத்தர் கொலை தொடர்பான இரசாயனப்பகுப்பாய்வு அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை”.– என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தமது ஆட்சேபனையில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இந்த ஆட்சேபனை விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் பொலிஸார், மேல் நீதிமன்ற அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரனிடம் நேற்றுக் கையளித்தனர். அவர் இன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் அணைத்து பிணை விண்ணப்பங்களை மன்றில் அழைக்குமாறு கோரினார்.

அதற்கு அமைவாக மேல் நீதிமன்றில் சந்தேகநபர்கள் மூவர் சார்பான பிணை விண்ணப்பங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. சந்தேகநபர்கள் மூவர் சார்பிலும் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனின் ஏற்பாட்டில் சட்டத்தரணி றெமீடியஸுடன் மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தா முன்னிலையானார்.

சந்தேகநபர்களுக்கு எதிரான சுருக்கமுறையற்ற விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆரம்பிக்கப்படவில்லை. பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகள் நிறைவடையவில்லை. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணக் குடாநாட்டை மட்டுமல்ல முழு நாட்டையும் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியது.

சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்ட விடயம் ஊடகங்களில் வெளிவந்தமையால் மக்களுக்கு அது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டமையால் சாட்சிகளுக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன், பொலிஸாரின் விசாரணை பாதிக்கப்படும் நிலையும் ஏற்படும் என்று அரச சட்டவாதி மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

சந்தேகநபர்களுக்கு ஒரு மன்றினால் பிணை வழங்கப்பட்ட பின்னர் அதற்று அதே மன்றிலேயே ஆட்சேபனை தெரிவிப்பது ஏற்புடையதல்ல. நீதிமன்றின் கட்டளையை சவாலுக்குட்படுத்தும் நடவடிக்கை இது.

தேவையானால் இந்த மேல் நீதிமன்றத்தில் பிணை அனுமதி தொடர்பில் ஆட்பேனை இருப்பின் பொலிஸ் தரப்பும் அரச சட்டத்தரணியும் இதற்கு மேற்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத் திலேயே மேன்முறையீடு செய்ய வேண்டும் என சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா குறிப்பிட்டார்.

சந்தேக நபர்கள் பிணையில் வெளிவந்தால் பொலிஸாரின் விசாரணைக்கு அது அச்சத்தை ஏற்படுத்தும் என்று அரச சட்டவாதியின் ஆட்சேபனை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளது. அதனை ஏற்க முடியாது என்று அரச தரப்பை கடுமையாகச் சாடி மூத்த சட்டத்தரணி மன்றில் சமர்ப்பணம் முன்வைத்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று பிணை ஆட்சேபனை மனுவின் மீது திங்கள் அன்று தீர்ப்பு வழங்கப்படும் என அறிவித்தது.

மேல் நீதிமன்ற நீதிபதி மாக்கவாசகர் இளஞ்செழியனின் வாகனத்துக்கு பாதுகாப்பு வழங்கிச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிளை இடைமறித்த ஒருவர், அவருடைய கைத்துப்பாக்கியைப் பறித்து அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார். சம்பவத்தில் படுகாயமடைந்த சார்ஜன்ட் ஹேமாவகே சரத் ஹேமச்சந்திர யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவருக்கு உப பொலிஸ் பரிசோதகராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

அத்துடன், மேல் நீதிமன்ற நீதிபதியின் காரில் பயணித்த மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தர் மீது சூடு நடத்தப்பட்டது. அவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நல்லூர் கந்சுவாமியார் ஆலய தெற்கு வீதிப் பகுதியில் 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி இடம்பெற்றது. சம்பவத்தைத் தொடர்ந்து இரண்டு நாள்களில் பிரதான சந்தேகநபரான செல்வராசா மகிந்தன் என்பவர் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் சரணடைந்தார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் பாலசிங்கம் மகேந்திராசா, செல்வராசா ஜயந்தன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் 2017 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தார். அவை விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது.

சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்கலாம் என்ற எண்ணத்துக்கு மேல் நீதிமன்றம் வந்தால், அவர்களுக்கு கடுமையான நிபந்தனைகளுடன் பிணை வழங்கவேண்டும் என்று அரச சட்டவாதி மன்றுரைத்தார். அதனையடுத்து கட்டளை வழங்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மூவரும் காசுப் பிணையாக தலா 2 இலட்சம் ரூபா பணத்தை நீதிவான் நீதிமன்றில் வைப்பிலிடவேண்டும். மூவரும் 5 லட்சம் ரூபா பெறுமதியையுடை தலா இரண்டு ஆள் பிணையாளிகளை முற்படுத்த வேண்டும்.

சந்தேகநபர்கள் மூவரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்ற அலுவலகத்தில் கையொப்பமிட வேண்டும். மூவரும் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்படுகிறது என்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் கட்டளை வழங்கியிருந்தார்.

# மாவீரர்களின் பெற்றோர்கள் மாங்குளத்தில் மதிப்பளிப்பு



முல்லைத்தீவு, நவ. 22

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கௌரவிப்பும் அவர்களுக்கான ஒரு தொகுதி உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வும் கடந்த திங்கள்கிழமை மாங்குளத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் கலந்துகொண்டு உலர் உணவு பொதிகளை வழங்கினார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணிதலைவர் எஸ்.தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தயார் செல்வராணி ஏற்றி வைக்கத் தொடர்ந்து சுடர் களை புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஏ.இரத்தின வடிவேல், தமிழ்தேசியமக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் க.விஜயகுமார், மாங்குளம் மகாவித்தியால அதிபர் யோகானந்தராஜா மற்றும் கிந்துஜன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

மாங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 50 மாவீரர் குடும்பங்களுக்கு ஒரு தொகுதி உலர் உணவுப்பொருட்களும் தென்னங்கன்று ஒவ்வொன்றும் இதன் போது வழங்கப்பட்டன. (ஐ)

## நம்பிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசின் மீது நம்பிக்கையில்லை என்று, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டதாக நாடாளுமன்றப் பதிவேட்டில் கூறப்பட்டுள்ளது.

இந்த நாடாளுமன்றப் பதிவேட்டின் படி, பிரதமர், அமைச்சர்கள், அவைத் தலைவர், அரச தரப்பு பிரதம கொரடா என எவரும் இல்லை என்ற நிலை உறுதியாகியுள்ளது.

இந்த நாடாளுமன்றப் பதிவேட்டை முன்வைத்து சர்ச்சைக்குரிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் சாத்தியம் உள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ் மாவட்ட எம்.பியும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன்தான்.

நேற்று அவர் திடீரெனக் கொழும்பில் மிஸ்ஸிங். அவரது தொலைபேசி அவர் வெளிநாட்டில் என்றது. எந்த நாடு என்பதற்கு யாரிடமும் பதில் இல்லை. அவரிடம் இருந்துதான் பதில் இல்லை என்றால், அவரை ஒட்டிக் கொண்டிருக்கும் அல்லக்கைகள் கூட பத்திரிகையாளர்களின் தொலைபேசிக்கு லைனில் வர மறுத்து அதிசயமான மௌனம் காத்தன.

நேற்று முன்தினம் தமது சக எம்.பிக்கள் சிலருடன் சரளமாக உரையாடிய சுமந்திரன், தற்போதைய அரசியல் நெருக்கடியினால் தமக்குப் பாதுகாப்புச் சிக்கல் இருப்பதாகவும் ஓரிரு நாள்கள் வெளியே – வெளிநாட்டுக்கு – போய் இருந்துவிட்டு, நாடாளுமன்ற அமர்வு சமயம் மட்டும் சபைக்கு வந்து போனால் என்ன என்று யோசிக்கின்றேன் என ‘கயிறு’ விட்டிருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

நேற்று முன்தினம் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான உரையாடலுக்கு மத்தியில் நேற்று புதனன்று ஒரு வேலையாக இந்தியா போக வேண்டியிருக்கின்றது என அவர் மேம்போக்காகக் குறிப்பிட்டார் எனவும் அறியமுடிந்தது.

ஆனால் தாங்கள் அறிந்த வரை சுமந்திரன் நேற்று இந்தியா செல்லவில்லை எனக் கொழும்பில் உள்ள இந்தியத் தரப்புகள் நேற்று உறுதிபடத் தெரிவித்தன.

அப்படியானால் சுமந்திரன் எங்கு சென்றார்? இந்த அரசியல் நெருக்கடி சமயம் இந்தத் திடீர் வெளிநாட்டு அதிரடி விசிட் ஏன்?

நிச்சயமாகப் பாதுகாப்புக் கருதி அவர் வெளிநாடு போகவில்லை. ஏனென்றால் 24 மணி நேரத்துக்குள் தமது வெளிநாட்டு ‘விசிட்’டை முடித்துக் கொண்டு நேற்றிரவு அவர் கொழும்பு திரும்பவிருந்தார் என எதிர்பார்க்கப்பட்டது. 24 மணித்தியாலத்துக்குக் குறைந்த ஒரு நேரத்துக்கு பாதுகாப்புக்காக அவர் வெளிநாடு செல்ல வேண்டிய தேவை ஏதும் கிடையாது என்பது புரிந்துகொள்ளத்தக்கதே.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்துவதற்கான அப்போதைய கூட்டு எதிரணியின் திட்டமிடல், வியூகம் வகுத்தல், மந்திராலோசனைச் சந்திப்பு எல்லாம் சிங்கப்பூரில்தான் நடந்தன. அது போன்ற ஒரு நாட்டுக்குத்தான் சில தரப்புக்களுடனான மந்திராலோசனைக்கு சுமந்திரன் இப்போது போயிருக்கலாம், அதனால்தான் மூன்றாம் நபருக்குத் தெரியாமல் சத்தம் சந்தடியின்றி அவர் பயணமானார் என்று சில வட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன.

எது, எப்படியென்றாலும் இன்னும் ஓரிரு தினங்களுக்குள் விடயம் அம்பலமாகும் என எதிர்பார்க்கலாம்.

நாட்டில் இருக்க வேண்டிய சுமந்திரன் திடுதிப்பென வெளிநாடு போகிறார்.

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்க்கூட்டமைப்புத்த தலைவருமான சம்பந்தன் தமது ஒரிஜினல் திட்டப்படி நேற்று லண்டன் போயிருக்க வேண்டியவர். ஆனால் தென்னிலங்கையில் வெடித்த அரசியல் களேபரம் காரணமாக அவரது லண்டன் விசிட் தடைப்பட்டுப் போயுள்ளது. தமது லண்டன் பயணம் தள்ளிப் போன கடுப்பில் சம்பந்தன் இருக்கின்றார் என்றும் கூறப்பட்டது.

சுமந்திரனுக்கோ எதிர்பாராத திடீர் வெளிநாட்டுப் பயணம். சம்பந்தனுக்கோ திட்டமிட்ட வெளிநாட்டுப் பயணம் ரத்து.

இதுதான் அரசியல்வாதிகளின் நிலைமை பாருங்கோ...!

- மின்னல் -

# நிசாந்த சில்வாவின் இடமாற்றத்தை ரத்துச் செய்ய உத்தரவிடவேயில்லை

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு மறுப்பு



கொழும்பு, நவ. 22

குற்றப் புலனாய்வுப் பிரிவின், ஒருங்கிணைக்கப் பட்ட குற்றங்கள் விசாரணை அலகின் பொறுப்பதிகாரியான நிசாந்த சில்வாவின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு தாங்கள் உத்தரவிடவில்லை என்று இலங்கை தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முக்கியமான பல வழக்குகளின் விசாரணை அதிகாரியான நிசாந்த சில்வா கடந்த 19ஆம் திகதி திடீரென, ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைய, பொலிஸ்மா அதிபரால் நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்ததுடன், ஜனாதிபதிக்கு உள்நாட்டிலும் அனைத்துலக அரங்கிலும் பலத்த கண்டனங்களைத் ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், நிசாந்த சில்வாவின் இட மாற்ற உத்தரவு பொலிஸ்மா அதிபரால் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

எனினும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமையவே, இந்த இடமாற்ற உத்தரவு ரத்துச் செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந் தன.

இதனை மறுத்துள்ள, பொலிஸ் ஆணைக்குழுவின் செயலர் சமன் திச நாயக்க, பொலிஸ் மா அதிபருக்கு, நிசாந்த சில்வாவின் இடமாற்றத்தை ரத்துச் செய்யு மாறு ஆணைக்குழு பணிக்கவில்லை என்றும், குற்றப் புலனாய்வுப் பிரிவு தமது ஆணைக்குழுவின் செயற்பாட்டுப் பரப்பில் இல்லை என்றும் கூறியுள்ளார்.

இடமாற்ற உத்தரவையும், அதனை ரத்துச் செய்யும் உத்தரவையும், வழங்கியது பொலிஸ் மா அதிபரே என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சம்பள முரண்பாட்டு ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதிக்கு

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் பரிசீலனை செய்து பரிந்துரைகளை முன்வைப்பது தொடர்பில் நியமிக்கப்பட்ட சிறப்பு ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த வாரத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை ஆணைக்குழுவின் தலைவர் எஸ். ரனுக்கே தெரிவித்தார்.

அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் சம்பளப் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்து மாறு தொழிற்சங்களுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, 800க்கும் அதிகமான தொழிற்சங்கங்கள், தமது விடயங்களை ஆணைக்குழுவிடம் முன் வைத்துள்ளன. ரயில் சேவை மற்றும் தபால் சேவை உள்ளிட்ட அரச சேவைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகள் தொடர்பில், ஆணைக்குழு பரிசீலனை செய்துள்ளது. சம்பள முரண்பாடுகளைக் களைவதற்கான பரிந்துரைகள் பலவற்றை அறிக்கையினூடாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்று ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அரச சேவையின் உள்ள உத்தியோகத்தர்களின் சம்பள மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் இது வரை நடைமுறையிலுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தி அரச சேவையில் சம்பளம் தொடர்பிலான பிரச்சினைகள் காணப்படுமாயின் அவற்றைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. கடந்த ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதுடன், எஸ். ரனுக்கே உள்ளிட்ட 15 பேர் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முல்லைத்தீவில் 59 ஏக்கர் காணிகள் ராணுவத்தினரால் நேற்று விடுவிப்பு

முல்லைத்தீவு, நவ. 22

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மூன்று முறிப்புப் பகுதியில் வன்னிப் பாதுகாப்புப் படைத்தலைமையகத்தால் உபயோகிக்கப்பட்டு வந்த மக்களின் 59.8 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளது.

20 ஆவது சிங்கப் படையணியின் கட்டளை அதிகாரியான மேஜர் இந்திக்க விக்கிரமசிங்க இந்தக் காணிகளுக்கான பத்திரங்களை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தார்.

இந்தக் காணி ஆவணங்களை மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்து அவர்கள் ஊடாக உரிய முறையில் மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஐ)

# மேல் மாகாண சபையில் ஆபாசப்படம்; உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணை

மேல் மாகாண சபையின் வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், சில உறுப்பினர்கள் சபையில் இருந்தகணனியில் ஆபாசக் காட்சிகளைப் பார்வையிட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாகாணப் பிரதம செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்தார்.

மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய வின் பணிப்புரையின் கீழ் விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்கள் குணசிறி ஜெய நாத், சுமித் சொய்சா மற்றும் கீர்த்தி காரியவசம் ஆகிய மூவர் மீதே இந்த விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.

மாகாணசபைக்குள் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளமையை உறுதிப்படுத்தும் வகையில் சபைக்கு இணையத்தள வசதிகளை வழங்கும் அமைப்பிடம் அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மேல் மாகாண பிரதம செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்தார்.

ஆறரை பில்லியன் ரூபாவுக்கும் அதிக பணம் செலவிட்டு, பத்தரமுல்லை டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட மேல் மாகாண சபையின் புதிய கட்டடத்தில் முதலாவது சபைக் கூட்டம் கடந்த திங்கள் நடைபெற்றது. அடுத்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதே மாகாண சபை அமர்வின் முக்கிய நோக்கமாகும்.

முதலமைச்சர் வரவு-செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மூவர் ஆபாசக் காட்சிகளைப் பார்வையிட்டனர்.

நவீன கட்டமைப்புக்களுடன் கூடிய இந்தக் கட்டடத்திலுள்ள மண்டபத்தில், அனைத்து உறுப்பினர்களும் இணையத்தள வசதிகளுடன் நவீன கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

தலா 6,40,000 ரூபா பெறுமதியான 150 கதிரைகளை இந்த கட்டடத்திற்காகவே கொள்வனவு செய்ய முயற்சித்தனர். எனினும் அதனை ஆளுநர் தடுத்து நிறுத்தினார். (ஐ)

# பிரதம நீதியரசருக்கு சபாநாயகர் கடிதம் ஏதுவுமே அனுப்பவில்லை

## வெளியாகிய கடிதம் போலியானதாம்



கொழும்பு, நவ. 22

சபாநாயகர் கரு ஜயசூரிய வால் பிரதம நீதியரசருக்கு அனுப்பப்பட்டதாகச் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள கடிதம் பொய் எனச் சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றும் செய்யப்பட்டுள்ளது.

புதிய பிரதமர் மற்றும் அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்காமை காரணமாக, நாட்டில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகவும், அரசமைப்பின் 37.2 சரத்துக்கமைய பிரதம நீதியரசரின் அனுமதியுடன் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்கள், முப்படைகளினதும் கட்டளைத் தளபதி பொறுப்பு என்பன தனக்கு கிடைக்கவேண்டுமெனத் தெரிவித்து பிரதம நீதியரசர் பெரேராவுக்குச் சபாநாயகரால் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கடிதம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள நிலையில், சபாநாயகர் அலுவலகம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

சபாநாயகர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பில் விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

சபாநாயகர் கரு ஜயசூரியவின் பணிப்புரைக்கமைய, நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நேற்று இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# அரசியல் குழப்பதாரிகளுக்கு எதிராக பயணத் தடை! சொத்துகள் முடக்கம்!!

## சர்வதேச நாடுகள் இரகசியத் திட்டம்

கொழும்பு, நவ. 22

இலங்கையின் அரசியல் நெருக்கடி தொடருமானால், இதற்குக் காரணமான அரச தரப்பைச் சேர்ந்தவர்கள் மீது பயணத் தடை, மற்றும் சொத்துக்கள் மீதான தடைகளை விதிக்கும் முடிவுகளை எடுக்க சில நாடுகள் திட்டமிட்டுள்ளன என இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் நோக்கில், அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா போன்ற நாடுகளே இந்த முடிவுகளை எடுக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

அரசியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதில் பிடிவாதமான நிலைப்பாட்டில் இருந்தால், இந்த அரசியல் குழப்பங்களுக்குக் காரணமானவர்கள் மீது பயணத்தடை விதிக்கப்படலாம் என்றும், தமது நாடுகளில் உள்ள குறிப்பிட்ட நபர்களின் சொத்துக்களை முடக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மைத்திரி - மஹிந்த கூட்டமைப்பில் உருவாகும் எதேச்சாதிகார அரசு

**மைத்திரி – மஹிந்த அரசியல் சதி நடவடிக்கைகளினால் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் பேரிழப்பு சொல்லுந்தரமன்று.**

**நாடாளுமன்றில் பெரும்பான்மை ஆதரவைப் பெறாத ஒருவரைப் பிரதமராக்கி, நாடாளுமன்ற அடாவடித்தனங்கள் மற்றும் அராஜகங்கள் மூலம் அவரைப் பதவியில் தொடர்வதற்கு இடமளித்து, நாட்டைப் பெரும் அரசியல் குழப்பத்துக்குள் – களேபரத்துக்குள் – ஆழ்த்தி நிற்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**இவ்வளவும், தமது சுதந்திரக்கட்சி மற்றும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன ஆகியவை உள்ளடங்கிய கூட்டின் சார்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் மைத்திரிபால சிறிசேனவின் நப்பாசையின் விளைவுதான் என்பது சகலரும் அறிந்த பகிரங்க விடயம்.**

**ஆனால் தூரநேக்கற்ற – அரசியல் தீர்க்கதரிசனம் இல்லாத – மைத்திரி தரப்பின் இந்த நடவடிக்கையும் அதன் விளைவுகளும் நாட்டுக்குப் பேரிழப்பையும் பெரும் பாதிப்பையும் தந்து நிற்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.**

**அரசியல் ஸ்திரமற்ற நிலையால் நாட்டின் நிர்வாகம் குழம்பிப் போய் நிற்கின்றது. பொருளாதாரம் மேசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கைத் தீவின் மீது நம்பிக்கை வைத்து பொருளாதார, வர்த்தக, வியாபார ஊடாட்டங்களில் ஈடுபட்டிருந்த தரப்புக்கள் இலங்கை மீது புதிதாக எழுந்துள்ள அவநம்பிக்கை காரணமாகப் பின் வாங்கத் தொடங்கியுள்ளன. அதனால் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவுகளும் பாதிப்புகளும் கணக்கிடமுடியாதவை.**

**★சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் 1.85 மில்லியன் டொலர் ( சுமார் 32 ஆயிரம் கோடி ரூபா) பெறுமதியான திட்டங்கள் முடங்குகின்றன.**

**★49 கோடி டொலர் ( சுமார் 8 ஆயிரத்து 700 கோடி ரூபா) அமெரிக்க நிதி உதவி இடைநிறுத்தம்.**

**★1.4 பில்லியன் டொலர் (சுமார் 25 ஆயிரம் கோடி ரூபா) பெறுமதியான ஜப்பான் உதவித் திட்டங்களில் தடங்கல்.**

**★சுமார் மூவாயிரம் கோடி ரூபா முதலீடுகள் இலங்கைப் பங்குச்சந்தையில் இருந்து ஒரேயடியாக விலக்கப்பட்டிருக்கின்றன.**

**★ரூபாவின் நாணயப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஒரு மாதத்தில் ஏற்பட்ட இழப்பு மட்டும் 10 ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டும் என்று கணக்கிடப்படுகின்றது.**

**★இந்த அரசியல் ஸ்திரமின்மை மற்றும் குழப்ப நிலையால் சுற்றுலாத்துறைக்கு இந்த ஒருமாத காலத்தில் ஏற்பட்ட இழப்பு சுமார் ஆயிரம் கோடி ரூபா.**

**★ஜி. எஸ்.பி. வரிச்சலுகையை நாடு இழக்கக் கூடிய ஏது நிலைகள் நெருங்கி வருகின்றன.**

**★மீன் ஏற்றுமதியை ஐரோப்பிய யூனியன் தடை செய்யும் ஆபத்து சூழ்ந்து வருகின்றது.**

**★ஐ.நா. உரிமைகள் மற்றும் பட்டயங்களில் உள்ள விடயங்களை நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டு, அதன் விளைவான சர்வதேசப் பாதிப்புக்கள் இறுக்கமாக வரலாம்.**

**★புலமை சர்ந்தோர், நிபுணர்கள், அறிவுஜீவிகள், தொழில் திறமையாளர்கள் நாட்டைவிட்டு பெருமளவில் வெளியேறும் ஆபத்தும் உண்டு.**

**– இவை எல்லாம் மைத்திரி – மஹிந்த கூட்டு நடத்திய அரசியல் சித்து விளையாட்டுக்களின் பெறுபேறாக ஏற்பட்ட அரசியல் ஸ்திரமின்மையின் விளைவுகளாகும். இப்போதைய அரசியல் குழப்பத்தை நேர்மையான முறையில் – நீதியான நெறியில் – ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் அரசியல் நெறிமுறைகளின் அடிப்படையில் – அணுகி விரைந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் –**

**நிறைவேற்று அதிகாரம் என்ற வலிமையை வைத்துக் கொண்டு ஜனநாயக மாண்புகளை மிதித்து, சர்வாதிகார மற்றும் எதேச்சாதிகாரப் போக்கிலான ஆட்சியை வல்வந்தமாகத் திணிக்கும் செயற்போக்கை விலக்கிக் கொள்ளாவிட்டால் –**

**தோற்றுப்போன நாடாக இலங்கை விரைவில் அடையாளப்படுத்தப்படும்.**

**அந்தச் சீரழிவுக்கான முழுப் பெறுப்பபையும் மைத்திரி – மஹிந்த கூட்டு மீதே வரலாறு பெரும் பழியாகச் சுமத்தி நிற்கும்.**

# அரசியல் நெருக்கடிக்குத் தீர்வை முன்வைக்கிறார் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், நவ. 22

தற்போதைய நாடாளுமன்றத்தின் மிகுதிக் காலம் கிட்டத்தட்ட 2 வருடங்கள் முடியும் வரையில் ஒரு தேசியக் கூட்டரசை மஹிந்த ராஜபக்ஷவுடன் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தி முக்கியமான விடயங்களுக்கு ஏன் பரிகாரம் தேட முடியாது. அல்லது ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமித்து மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டால் அது பொருத்தமாக அமையும்

– இவ்வாறு ஆஸ்திரேலியப் பிரதித் தூதுவரிடம் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் யோசனை முன்வைத்தார்.

ஆஸ்திரேலிய பிரதித் தூதுவர் விக்டோரியா ஹோக்லி நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். அவர் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை அவரது யாழ்ப்பாண இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் இடம்பெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகம் முன்னதாகவே ஊடகங்களுக்குத் தகவல் வழங்கியிருந்தது. அதனால் சந்திப்புத் தொடர்பான ஒளிப் பதிவு மற்றும் செய்தி சேகரிக்கச் சென்றிருந்த யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரின் பாதுகாப்பு பொலிஸாரால் அனுமதி மறுத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த நிலையில் இந்தச் சந்திப்புத் தொட.ர்பில் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனால் நேற்றிரவு ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஆஸ்திரேலிய பிரதித் தூதுவர் விக்டோரியா ஹோக்லி என்னைச் சந்தித்தார். தூதுவருக்கு கொழும்பில் பல வேலைகள் இருப்பதால் தன்னை அனுப்பியதாகக் கூறினார். பொதுவாக இன்றைய மத்திய அரசின் நிலை பற்றியும் வடமாகாணத்தின் அரசியல் நிலை பற்றியும் அறிந்து கொள்ளவே தாம் இங்கு வந்ததார் எனக் கூறியிருந்தார்.

மத்திய அரசில் தற்போது நிர்வாக ரீதியாகவும் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்திருக்கும் நிலை பற்றி நாங்கள் இருவரும் ஆராய்ந்தோம். தற்போதைய நிலையில் எவ்வாறு மத்திய அரசால் அரசியல் நடவடிக்கைகள் கொண்டு செல்லப்படலாம் என்று அவர் எனது கருத்தைக் கேட்டார். ஒரு நீதியரசராக இருந்த நான் எந்நேரமும் ஒரு பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என்றுதான் பார்ப்பேன். அந்த வகையில் தற்போதைய நிலையை இலங்கைக்கு நன்மை தருவதாக மாற்றலாம் என்ற கருத்தை அவருக்குத் தெரிவித்தேன்.

அது எப்படி என்று அவர் கேட்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் 40 ஆண்டுகாலமாக பதவி வகித்த ஜனாதிபதி சிறிசேன திடீர் என்று ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் ஓர் ஒப்பந்த அடிப்படையில் 2015 ஜனவரி தொடக்கம் கூட்டரசு ஒன்றை நடத்த முடிந்ததாக இருந்தால் தற்போதைய நாடாளுமன்றத்தின் மிகுதிக் காலம் கிட்டத்தட்ட 2 வருடங்கள் முடியும் வரையில் ஒரு தேசியக் கூட்டரசை மஹிந்த ராஜபக்ஷவுடன் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தி முக்கியமான விடயங்களுக்கு ஏன் பரிகாரம் தேட முடியாது என்று கேட்டேன். எவ்வாறு அது சாத்தியமாகலாம் என்று கேட்டார்.

அதாவது, ஜனாதிபதி சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் மஹிந்த ராஜபக்ஷவுடன் ரணில் ஒரு கூட்டு அரசுக்கான உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டு நாட்டின் முக்கிய பிரச்சினைகளை இருவரும் தீர்க்க முன்வரலாமே என்று கூறினேன். அது முடியுமா? என்று அவர் கேட்டார். இரு தரப்பாரும் நாட்டின் நலன் கருதி இவ்வாறான கூட்டு அரசை நிறுவ பின்வரும் முக்கிய விடயங்களைத் தீர்த்து வைக்கலாம் என்று கூறினேன்.

முதலாவதாக தமிழர்களின் பிரச்சினைகள்.

இது சம்பந்தமாக இருவரும் சேர்ந்து ஜனாதிபதி ஊடாக சிறையில் வாடும் தமிழ்ச் சிறைக் கைதிகளை விடுவிக்கலாம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனே நீக்கலாம்.

காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தை மேலும் பலம் வாய்ந்ததாக மாற்றலாம்.

ஜெனீவாவில் அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஒரு சுமூகமான தீர்வுக்கு வரலாம்.

தமிழ் மக்கள் பிரச்சினையை ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழர் தரப்புகள் என மூன்று தரப்பாரும் பேசித் தீர்க்கலாம். அதாவது புதிய அரசியல் யாப்பை சமஷ்டி அடிப்படையில் முழு நாட்டிற்கும் ஏற்புடைத்ததாக இயற்றலாம் என்றேன்.

அடுத்து எமது பொருளாதார நிலையைச் சீர்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினேன். ஜிஎஸ்பி நிறுத்தப்பட்டமை சம்பந்தமாகவும் வெளிநாட்டில் இருந்து வரும் உதவிகள் நிறுத்தப்பட்டமை சம்பந்தமாகவும் உரிய நடவடிக்கை எடுத்து நாட்டின் ஸ்திரத் தன்மையை நிச்சயப்படுத்தலாம். குறைந்து கொண்டு போகும் எமது ரூபாயின் பெறுமதியைத் திடப்படுத்தலாம். நாட்டின் கடன் சம்பந்தமாக இருவரினதும் ஒருமித்த கருத்துக்களினூடு அவற்றைத் திரும்பச் செலுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

எதற்கும் ரணிலைத் தொடர்ந்து பிரதம மந்திரியாக ஏற்றுக்கொண்டு மகிந்தாவை எதிர்க்கட்சித் தலைவர் ஆக்கி இருதரப்பாரிடையேயும் ஒரு உடன்படிக்கையை உண்டு பண்ணலாம்.

மற்றும் பல விடயங்களில் ஒருங்கிணைந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு இரு தரப்பாரும் முன்வரலாம். இன்றைய கால கட்டத்தில் இது அதி முக்கிய தேவையாக இருப்பதை இரு தரப்பாரும் உணர்ந்து கொண்டால் இவ்வாறான கூட்டரசை அவர்கள் ஸ்தாபிக்க முடியும்.

இதற்கு ஒரே ஒரு முக்கிய தடை இருப்பதை நான் காண்கின்றேன். குறிப்பாக எதிர்க்கட்சியினருக்கு எதிராக சிறப்பு மேல் நீதிமன்றங்கள் நியமிக்கப்பட்டிருப்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும். அடுத்த இரண்டு வருடங்களுக்கும் குறித்த மேல் நீதிமன்றங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளைத் தற்போதைய அவசரமும் அவசியமும் கருதித் தள்ளி வைக்கலாம் என்று எண்ணுகின்றேன். ஆனால் உரியகாலத்தில் சட்டம் தனது நடவடிக்கைகளை எடுக்க அனுமதி வழங்கப்பட வேண்டும்.

ஆஸ்திரேலிய பிரதித் தூதவர், இவை சம்பந்தமாக மத்திய அரசினர் என்ன நினைப்பார்கள் என்று தமக்குத் தெரியாது என்றும் ஒரு சுமூகமான தீர்வைக் கொண்டுவர வடக்கில் இருக்கும் நான் இந்தளவுக்குச் சிந்தித்தமை பற்றிக் கூறிப் பாராட்டினார்.

அடுத்துக் கள நிலைவரம் பற்றி குறிப்பிட்டு தென்னவர்களின் குடியேற்றங்கள் பற்றியும் பௌத்த கோவில்கள் திறக்கப்படுவது பற்றியும், நிர்வாக ரீதியாக நாங்கள் முகம் கொடுத்த தடைகள் பற்றியும் வடமாகாண சபை சம்பந்தமாகப் பலதையும் பேசிக் கொண்டோம் – என்றுள்ளது. (ஐ)

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கை படாத ஆதிக் காடுகளை விடச் சிறந்தது எதுவும் இல்லை"

*- சார்ள்ஸ் டார்வின்*
*(பரிணாமவியலின் தந்தை)*

## நாளை

23.11.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: கார்த்திகை – சித்தம் மா.6.19
திதி : பூரணை பி.ப. 12.09
சுபநேரம் : 6.11 – 07.41 வரை
இராகுகாலம் : 10.41– 12.11 வரை

காலைக்கதிர் Kalaikkathir



## அமெரிக்காவில் குடியேறிகளைத் தடுக்கும்

# ட்ரம்ப் உத்தரவுக்கு நீதிமன்றம் தடை!

நியூயோர்க், நவ. 22

அமெரிக்காவின் தென்பகுதி வழியாக அகதிகளாக நுழைவோர் அந்நாட்டில் புகலிடம் கோருவதற்கு அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விதித்திருந்த தடையுத்தரவை விலக்கி சான்பிரான்சிஸ்கோ மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க மனித உரிமை குழுக்களின் வாதங்களை கேட்ட சான்பிரான்சிஸ்கோ மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜான் டிகர், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்த தடையுத்தரவைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க எல்லைக்குள் ஆயிரக்கணக்கான அகதிகள் நுழைவதை அடுத்து இந்தத் தடையுத்தரவை இம்மாதத் தொடக்கத்தில் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

தேசத்தின் நலன்களை கருத்திற்கொண்டு இவ்வாறு செய்ததாக டிரம்ப் கூறினாலும், அதை ஏற்றுக்கொள்வதற்கு மனித உரிமை அமைப்புகள் மறுத்தன.

மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான அகதிகள் பல வாரங்களாக பயணித்து அமெரிக்க – மெக்ஸிக்கோ எல்லையை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

துன்புறுத்தல், வறுமை, வன்முறை போன்ற காரணங்களினால் ஹோண்டுராஸ், கௌதமாலா, எல் சால்வடோர் ஆகிய நாடுகளை சேர்ந்த தாங்கள் அமெரிக்காவில் அடைக்கலம் கோருவதற்காகப் பயணிப்பதாக அகதிகள் கூறுகின்றனர்.

இது குறித்து, சமீபத்தில் நடந்து முடிந்த அமெரிக்க இடைக்காலத் தேர்தல் பிரசாரத்தின்போது பேசிய ட்ரம்ப், புலம் பெயர்ந்தோரில் பெரும்பாலானோர் குற்றவாளிகள் என்றும், அணியணியாக நாட்டின் எல்லையை நோக்கி அகதிகள் வருவதை படையெடுப்பு என்றும் கூறியமையுடன், எல்லைகளில் தீவிர கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுமாறு ராணுவத்துக்கும் உத்தரவிட்டார். அதுமட்டுமின்றி, இந்த விவகாரம் அரசியல் காரணங்களுக்காக பெரிதுபடுத்தப்படுவதாகவும் ட்ரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார்.

**நீதிபதி என்ன சொன்னார்?**

வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்காவின் அனுமதிக்கப்பட்ட புகலிடம் கோரும் இடத்தின் வழியாக நுழைகிறாரோ இல்லையோ, சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவர்கள் புகலிடம் கோரி விண்ணப்பிக்க முடியும் என்று தனது தீர்ப்பின்போது நீதிபதி டிகர் சுட்டிக்காட்டினார்.



இம்மாதம் 9ஆம் திகதி ட்ரம்ப் வெளியிட்ட பிரகடனம், இதற்கு முந்தைய நடவடிக்கைகளை விட கடுமையானது என்றும் அவர் கூறினார்.

எந்த நோக்கத்திற்காகவும் அமெரிக்க அதிபரின் நிர்வாகம், ஏற்கனவே நடைமுறையிலுள்ள குடிவரவு சட்டங்களை மீறி பிரகடனத்தை அமல்படுத்த முடியாது என்று அவர் மேலும் கூறினார்.

ட்ரம்பின் தடையுத்தரவு சட்டவிரோதமானது என்று அறிவிக்கக்கோரி அமெரிக்கன் சிவில் லிபர்டீஸ் யூனியன் என்ற அமைப்பு தொடுத்த வழக்கை விசாரித்த நீதிபதி இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

டிகர் வழங்கியுள்ள இந்த தீர்ப்பு உடனடியாக அமலுக்கு வருவதாகவும், இதுகுறித்த வழக்கு டிசம்பர் மாதம் விசாரிக்கப்படும் வரை இது நீடிக்கும் என்றும் அந்த தீர்ப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் அடைக்கலம் கோருவதற்கு, சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இடங்களிலேயே விண்ணப்பிக்க முடியுமென்றும், சட்டவிரோதமாக அமெரிக்காவின் எல்லைப்பகுதிகள் வழியாக நுழைபவர்களுக்கு தடை விதிக்கப்படுவதாகவும் கூறி இம்மாதம் 9ஆம் திகதி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பிரகடனம் வெளியிட்டிருந்தார்.

அதுமட்டுமின்றி, இந்த தடையுத்தரவு அடுத்த 90 நாட்களுக்கோ அல்லது அமெரிக்கா மெக்ஸிகோவுடன் உடன்பாடு எட்டும் வரையோ அமலில் இருக்குமென்று அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## குமுறுகிறது புய்கோ எரிமலை

வட அமெரிக்காவில் புயல் அபாயமும், காட்டுத் தீ அபாயமும் சற்று ஓய்ந்த நிலையில் தற்போது தென்னமெரிக்காவில் உள்ள குவாடமாலா புய்கோ எரிமலை குழம்புகளை வெளியிட ஆரம்பித்துள்ளது. கடந்த வாரயிறுதியில் புகையை மாத்திரம் வெளியிட்டு வந்த எரிமலை சில தினங்களாகப் பாரியளவில் தீக்குழம்புகளையும் கக்கி வருகின்றது.

அந்த எரிமலையில் இருந்து சில மைல்கள் தொலைவில் இருந்து எடுக்கப்பட்ட காணொளிகளையும், ஒளிப்படங்களையும் பிரதேசவாசிகள் சமூகவலைத்தளங்களில் வெளியிட்டுள்ளனர். அதற்கு அருகில் உள்ள பிறிதொரு எரிமலையான அச்சென்டனான்கோ எரிமலையில் இருந்து குறித்த ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கடந்த ஜூன் மாதம் குவாடேமாலா புய்கோ எரிமலை வெடித்ததில் அதிலிருந்து வெளிப்பட்ட குழம்புகள் காரணமாக 190 க்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்தனர். இந்நிலையில், நேற்றுவரை எரிமலைக்கு அருகில் வசித்த சுமார் 4000 பேர் அங்கிருந்து அகற்றப்பட்டனர்.

எரிமலையிலிருந்து வெளிப்படும் கரும்புகை மற்றும் சாம்பல் என்பன 2 மைல்கள் தொலைவிற்கும் பரவுவதனாலும், எரிமலைக் குழம்புகள் நீரோடைகளில் கலப்பதினாலும் பிரதேச மக்கள் அங்கு வசிப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதுபற்றி குவாடேமாலாவின் எரிமலை சார்ந்த அறிவியல் நிபுணர்கள் கூறுகையில், 12,300 அடிகள் உயரமான குறித்த எரிமலையில் இருந்து வெளிப்படும் சத்தம் ஒரு ரயில் பயணிப்பதை போன்று தொடர்ச்சியாக கேட்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

# பதவி விலகினார் எரிக் சொல்ஹெய்ம்



நியூயோர், நவ. 22

இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தனது ஐக்கிய நாடுகள் சபை பதவியிலிருந்து விலகியுள்ளார்.

ஐ.நா. சுற்றுச்சூழல் தலைவராக விளங்கிவந்த எரிக் சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அப்பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

போக்குவரத்துச் செலவீனங்கள் தொடர்பாக எழுந்த சர்ச்சைகளை தொடர்ந்து அவர் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கணக்கெடுக்கப்பட்ட 668 நாட்களில் சொல்ஹெய்ம் 529 நாட்கள் பயணித்திருப்பதாகவும், இதற்காக விதிகளை மீறிச் சுமார் 5 ஐந்து லட்சம் அமெரிக்க டொலர்களை அவர் செலவிட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவரது பதவி விலகலை ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரஸ் ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும், அவரது பதவி விலகல் இன்று முதல் செயல்படுத்தப்படும் எனச் செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# சவுதியுடன் உறவு தொடரும்

## அமெ. ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், நவ. 22

சவுதி பத்திரிகையாளர் ஜமால் கசோக்ஜி கொல்லப்பட்ட விவகாரத்தில் உலக நாடுகளிடமிருந்து கடும் கண்டனங்களை சவுதி அரேபியா பெற்றபோதும், அந்நாட்டுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வரலாறு காணாத அளவு முதலீடு செய்வதற்கு ஒப்புக்கொண்டுள்ள சவுதி அரேபியா தங்களது 'திடமான கூட்டாளி' என்று ட்ரம்ப் வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கசோக்ஜி கொல்லப்பட்டது குறித்து சவுதியின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானுக்கு 'நன்றாக தெரிந்திருக்கும்' என்றும் ட்ரம்ப் அதில் ஒப்புக்கொண்டுள்ளார்.

அந்நிலையிலும், சவுதி அரேபியாவுடனான அமெரிக்காவின் உறவு தொடரும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சவுதி அரேபியா சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கசோஜி துருக்கியில் உள்ள சவுதிமிஹ் தூதரகத்தில் கடந்த ஒக்ரோபர் 2ஆம் திகதி கொல்லப்பட்டார்.

கசோஜி கொலை தொடர்பான ஓடியோ பதிவு குறித்து தனக்கு விவரிக்கப்பட்டதாகவும், ஆனால் தான் அதைக் கேட்கப்போவதில்லை எனவும் ஏற்கனவே ட்ரம்ப் கூறியிருந்தார்.

பத்திரிகையாளர் ஜமால் கசோக்ஜியை கொலை செய்வதற்கான உத்தரவை சவுதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான்தான் அளித்தார் என அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ. நம்புவதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது தொடர்பான ஆதாரங்களின் விரிவான மதிப்பீட்டை சி.ஐ.ஏ. செய்துள்ளதாகவும் அதன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.



முன்னதாக, பத்திரிகையாளர் ஜமால் கசோக்ஜியின் கொலையை விசாரிப்பதில் அதிபர் ட்ரம்ப் நேர்மையாக செயல்படவில்லை என்று குற்றஞ்சாட்டி, வெள்ளை மாளிகைக்கு வர அமெரிக்க அதிபர் தனக்கு விடுத்த அழைப்பை கசோக்ஜியின் காதலி ஹட்டீஜ் ஜெங்கிஸ் நிராகரித்தார்.

ட்ரம்ப் தன்னை வெள்ளை மாளிகைக்கு அழைத்திருப்பது அமெரிக்காவில் அவரை பற்றிய நல்ல கருத்தை தோற்றுவிப்பதற்கு என எண்ணுவதாக ஹட்டீஜ் ஜெங்கிஸ் கூறினார். முன்னதாக, அமெரிக்காவில் வாழ்ந்து வந்த ஜமால் கசோக்ஜி, சவுதி அரசைப் பற்றி கடுமையாக விமர் சித்து வந்தார்.

துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள சவுதி துணைத் தூதரகத்துக்கு சென்ற அவர் திரும்பவே இல்லை. பிறகு அவர் கொல்லப்பட்டதாக செய்தி வெளியானது.

இந்த சம்பவத்தால் சவுதி அரேபியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவில் சிக்கல் ஏற்பட்டதாக முன்னர் கூறப்பட்டது.

(ஐ)

# "நித்தம் நித்தம் மாறுகின்றதெத்தனையோ?"



- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -



உலகின் பார்வை முழுவதும் சில நாள்களாய் இலங்கையின் மீதுதான்.
காரணம், நிகழ்ந்திருக்கும் நாடாளுமன்றக் குழப்பங்கள்.
நாடாளுமன்றம் கூடப்போகிறது என்றும்,
யார் உண்மைப்பிரதமர்? யார் பொய்ப்பிரதமர் என்ற கேள்விக்கான விடை,
பெரும்பாலும் கிடைத்துவிடும் என்றும்,
நாடாளுமன்றைக் கூட்டாமல் ஜனநாயகத்தைப் புறந்தள்ளி,
ஜனாதிபதி செய்த ஆள்பிடிக்கும் வேலை,
வெற்றியில் முடிந்ததா? தோல்வியில் முடிந்ததா? என்பதற்காம் பதில் தெரிந்துவிடும் என்றும்,
ஆவலோடு அனைவரும் எதிர்பார்த்திருக்க,
விட்ட பிழையைச் சரிசெய்வதாய்ச் சொல்லி,
மீண்டும் ஒரு பிழையை விட்டார் ஜனாதிபதி.
தான் அமைத்த மஹிந்த ஆட்சிக்கு பெரும்பான்மை இல்லை என்பது,
பெரும்பாலும் தெரிந்துபோய்விட,
திடீரென 09 ஆம் திகதி இரவு நாடாளுமன்றத்தைக் கலைத்து,
சர்ச்சைகளின் நாயகனாகி இருக்கிறார் அவர்.

★ ★ ★ ★

ஜனாதிபதிக்கு இருந்த,
ஓர் அரசைக் கலைக்கும் அதிகாரத்தை,
ஆட்சிக்கு வந்ததும் தானே நீக்கிவிட்டு,
இன்று அடாவடித்தனமாய் அந்த அதிகாரத்தை,
கையில் எடுத்திருக்கும் ஜனாதிபதியின் செயல் கண்டு,
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.
உலக சமுதாயத்தை மதியாது,
ஜனாதிபதி எடுத்த இம்முடிவால்,
இலங்கையின் பொருளாதாரத்தில் மட்டுமன்றி,
அதன்அரசியல், பாதுகாப்பு, நீதி போன்றவற்றிலும்,
பெரும் உடைவுகள் ஏற்படப்போகின்றன என்று,
அரசியல் அவதானிகள் அஞ்சிய நிலையில்,
ஜனநாயகத் தூண்களில் ஒன்றாகக் கருதப்படும் நீதித்துறை,
மிகுந்த கம்பீரத்துடன் தனது கடமையைச் செய்து,
ஜனாதிபதியின் சமநிலைக் குழப்பத்திற்கு தற்காலிக முடிவு கட்டியது.

★ ★ ★ ★

ஆனாலும் பேரினத் தலைவர்கள் அதற்கும் அடங்குவதாய்த் தெரியவில்லை.
தொடர்ந்தும் தமது குறுக்குப் புத்தியால், காரணங்கள் பல காட்டி,
அவர்கள் நீதிமன்றத்தையும் நிராகரிக்க முனைந்து நிற்கின்றனர்.
நாடாளுமன்றை படக்கொட்டகையாக்கி,
அவர்கள் செய்யும் கூத்துக்கள் வரம்புமீறிப் போய்க்கொண்டிருக்கின்றன.
வெளிநாட்டுத் தூதுவர்கள், தம்நிலை மறந்து கைதட்டி ஆர்ப்பரிக்கும் அளவிற்கு,
இவர்களின் விறுவிறுப்பும் வேகமும் நிறைந்த சண்டைக் காட்சிகள்,
அதிகரித்துக் கொண்டே போகின்றன.
தாம், தன்னிறைவற்ற ஒரு நாட்டின் தலைவர்கள் என்பதையும்,
மற்றை நாடுகளிடம் கையேந்தித்தான் நம் வாழ்வு நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதையும்,
மறந்த இவர்களின் செயற்பாட்டில்,
ஆணவம் மட்டுமன்றி,
இலங்கையின் அழிவும் தெரியத் தொடங்கியிருக்கிறது.

★ ★ ★ ★

இதுவரைகாலமும் நாடு போரால் சிதைவுற்றது.
இனிவருங்காலத்தில் அது அரசியலால் சிதைவுறும் போல் தெரிகிறது.
தம் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு,
தமிழினத்தை முன்பு துடிக்கத் துடிக்கச் சிதைத்தார்கள்.



இனக்கலவரங்களின் போது நீதியின்றிச் சிதைக்கப்பட்ட தமிழினத்தாரின்,
உயிர், உடமை போன்றவற்றிற்கான எந்தப் பதிலும் உரைக்காமல் இருந்தவர்கள்,
நிகழ்ந்து முடிந்த போர்ப்பழியை ஆயுதக் குழுக்களின்மேல் மட்டுமே ஏற்றி,
தேசத்தைப் பாதுகாப்பதாய்ச் சொல்லி,
உலகம் பதைபதைக்க தமிழினத்தை அழித்தார்கள்.
அந்தப் பாவமோ? என்னவோ? இன்று அவர்கள் செயல்களாலேயே,
சுதந்திர இலங்கை அன்னை,
வல்லரசுகளின் கால்களில் மிதிபடும் நிலைக்கு வரத் தொடங்கியுள்ளாள்.
அன்று இலங்கையின் ஜனநாயகத்தைக் காப்பதாய்ச்சொல்லி,
தமிழர்களை அழித்தொழித்துக் கொண்டாடியவர்கள்,
இன்று தாமே தேசத்தை அழிவு நோக்கி நகர்த்தத் தொடங்கியிருக்கிறார்கள்.
இவர்களுக்கு யார் என்ன தண்டனை வழங்கப் போகிறார்களோ?
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது நிஜமாகத்தான் இருக்கிறது!

★ ★ ★ ★

அன்று ஜனநாயகத்தின் காவலராய்ப் பார்க்கப்பட்ட ஜனாதிபதி,
இன்று ஜனநாயகத்தின் எதிரியாய் பார்க்கப்படுகிறார்.
பிரச்சினையைத் தீர்க்கவேண்டியவரே பிரச்சினைகளின் காரணராகிவிட்ட நிலையில்,
அடுத்து, அதிகாரம் ஆயுதப்படைகளின் கைகளுக்குப் போகப் போகிறதா? அல்லது,
அடுத்த நாடுகளின் கைகளுக்குப் போகப் போகிறதா? என்று,
அஞ்சி நிற்கின்றனர் அரசியல் அறிந்தோர்.
அமெரிக்ககழுகும், சீன'ட்ரகனும்' இலங்கையை விழுங்க ஆயத்தம் செய்வதாய்,
பத்திரிகைகளில் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன.
என்னாகப் போகிறதோ யாரறிவார்?

★ ★ ★ ★

ஜனாதிபதியும் மஹிந்தவும் இணைந்து நடத்திய நாடகத்தை,
குழப்புவதில் முக்கிய பங்கு வகித்தவர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர்.
அவர் எடுத்த உறுதியான முடிவே,
ஜனாதிபதியின் சூழ்ச்சியை முறியடித்திருக்கிறது.
ஜனநாயகத்தன்மை சிறிதுமின்றி,
அழிக்கப்பட்ட ஒரு இனத்தின் பிரதிநிதியாய் நாடாளுமன்றுள் நுழைந்த சம்பந்தர்,
அதற்காகப் பழிவாங்கும் உணர்வு சிறிதுமின்றி,
தான் வகிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நேர்மை செய்து,
அண்மைப் பிரச்சினையில் தான் எடுத்த முடிவுகளால்,
இலங்கையின் ஜனநாயகக் காவலராய் மாறி தலைநிமிர்ந்திருக்கிறார்.
தமிழினத்தையும் தலை நிமிர்த்தியிருக்கிறார்.
எதிரிகளுக்கும் நேர்மை செய்யும் தமிழரின் பண்பை அவர் நிறுவியது கண்டு,
பேரினத்தார் கூட வியந்து நிற்பதாய்ப் பேசப்படுகிறது.
ஜனாதிபதியின் சூழ்ச்சிக்கு எதிராய் சம்பந்தனார் காட்டிய உறுதிப்பாடே,
மற்றைய சிறுபான்மைக் கட்சிகளையும்,
உறுதியான நிலைப்பாட்டுக்கு கொண்டு வந்ததாய்ப் பலரும் சொல்கிறார்கள்.

★ ★ ★ ★

வியாழேந்திரன் என்ற ஒரு கறுப்பாட்டைத் தவிர,
மற்றையஅனைத்துக்கூட்டமைப்புஉறுப்பினரும்,
தம்மை ஈர்க்க கோடிக்கணக்கில் விலைபேசப்பட்டபோதும்,
அதற்கு அசைந்து கொடுக்காமல் நின்று,
தமிழினஉரிமை இலட்சியமேதமது அரசியல்ப் பாதை என்பதனை,
பேரினத்தார்க்கு ஒற்றுமையால் எடுத்துக்காட்டி,
தமிழனத்தைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள்.
அண்மையில் வடக்கில் நடந்த அரசியல் குழப்பங்களைக் கண்டு,
தமிழினத்திற்குள் உட்பூசல்களை விளைத்து விட்டோம்என்றுஎண்ணிப்பெருமைப்பட்டவர்கள்,
இன்றைய நாடாளுமன்ற அரசியல் குழப்ப விடயத்தில்,
தமிழ்த்தலைவர்கள்காட்டியஒருமைப்பாட்டைக் கண்டு,
தம் அஸ்திரங்கள் வீணாகின என்று தலைகவிழ்ந்தார்கள்.

★ ★ ★ ★

அதுமட்டுமல்லாமல்,
வடக்கில் கூட்டமைப்பை ஒழித்துவிடுவது என்று கங்கணம்கட்டிக் கிளம்பி,
ஆர்ப்பரித்து நின்ற கூட்டமும்,
கூட்டமைப்பின் இன்றைய நாடளாவிய எழுச்சி கண்டு வாய் மூடி மௌனித்திருக்கின்றது.
வெற்றிக்கனி இனி நம் மடியில்தான் வீழும் என்று நம்பியிருந்த அக்கூட்டம்,
ஒற்றுமையாலும் உறுதியாலும் உயர்ந்திருக்கிற கூட்டமைப்பு உறுப்பினர்களின்மேல்,
மக்கள் மன்றுக்கு ஏற்பட்டிருக்கும் மதிப்பைக் கண்டு,
தம் எண்ணத்தில் மண் வீழ்ந்ததாய் நினைந்து ஓய்ந்திருக்கிறது.
தம் ஊதுகுழல்களான பத்திரிகைகளின் மூலம் உரத்துக் குரல் கொடுத்து,
உலா வந்து கொண்டிருந்தவர்கள்,
இன்று ஓய்ந்து ஆங்காங்கே முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
வெற்றுத் தலைவர்களின் வெறும் உணர்ச்சிக் கூச்சல்களைக் கேட்டு,
இவர்கள்தாம் தலைவர்கள் என எண்ணத் தொடங்கியிருந்த சில தமிழர்களும்,
வாய்ப்பேச்சு வேறு! செயல்வீச்சு வேறு! என்பதை உணர்ந்து,
தம் மன வாக்குச்சீட்டில் மாற்றம் செய்து புதிதாய்ப் புள்ளியிட முடிவு செய்திருக்கிறார்கள்.

★ ★ ★ ★

மேற்படி உண்மைகளை உணர்ந்து,
கூட்டமைப்பு இதே ஒற்றுமையுடன் தொடர்ந்து இயங்குமா?
காலம் தான் பதில் சொல்லவேண்டும்.
வாய்ப்பைத் தவறவிடுகிறவன் துரதிஷ்டசாலி,
வாய்ப்புக்களைத் தவறவிடுபவன் முட்டாள்.
கூட்டமைப்பினர் அறியவேண்டிய பொன்மொழி இது.

★ ★ ★ ★

இவ் இக்கட்டான சூழ்நிலையில்,
பலராலும்திட்டப்பட்ட சுமந்திரனின்பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.



நாடாளுமன்றினுள் கறி சமைக்க மிளகாய்ப் பொடியோடு வந்தவர்கள் கூட,
சுமந்திரனையும் சம்பந்தரையும் குறிப்பாய்த் தேடியதாய் செய்திகள் சொல்கின்றன.
இன்றைய நிலையில் இத்தகைய பிரச்சினையைக் கையாளும் திறன்,
கூட்டமைப்பு உறுப்பினர்களுள் மேற்சொன்ன இருவரையும் விட,
வேறெவருக்கேனும் உண்டா? எனும் கேள்வி,
மக்கள்மத்தியில்தவிர்க்கமுடியாமல்கிளம்பியிருக்கிறது.
கூட்டமைப்பு என்று இல்லை மற்றைத் தமிழ்க் கட்சிகளிலும் கூட,
அத்தகையோர் இருக்கின்றனாரா? என்பதும் கேள்விக்குரிய விடயமாகவே இருக்கிறது.
நடைமுறையில் சில திருத்தங்களைச் செய்து கொண்டாரேயானால்,
சம்பந்தனின் இடம் சுமந்திரனுக்காகக் காத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.
பலபேருக்குக் கசப்பை ஏற்படத்தப்போகும் இவ் உண்மையை,



காலம்அங்கீகரிக்கையில்நாம்கண்டுகொள்வோம்.

★ ★ ★ ★

முடிவுகளைக்காலந்தான்முக்கியப்படுத்துகிறது.
இன்றைய கால எல்லையில் சம்பந்தனாரின் முடிவு,
தமிழர்களைப் பெறுமதிப்படுத்தியிருக்கிறது.
சிங்களத் தலைவர்களின் கைப்பொம்மையாய் ஆடிக்கிடக்கிறார் சம்பந்தனார் என்றார்கள்.
இன்று, சம்பந்தரின் கையில் ஆடும் பொம்மைகளாகி இருக்கிறார்கள் சிங்களத் தலைவர்கள்.
நாளையார்கையில் யார்ஆடப்போகிறார்களோ?
இதுதான் நிரந்தர முடிவு என்று எதனையும் சொல்லிவிட முடியாது.
காலமாற்றம் சம்பந்தரின் முடிவை சிதைக்கவும் வாய்ப்பில்லாமல் இல்லை.
நடந்து முடிந்த சம்பவங்களால்,
மஹிந்த தமிழ்த்தலைவர்கள்மேல் கடுங்கோபம் கொண்டிருப்பார் என்பது வெளிப்படை.
தற்செயலாய் அவர் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறும் பட்சத்தில்,
நிச்சயம் அக்கோபத்தை தமிழ்த்தலைவர்களின் மேல் காட்டாமல் விடமாட்டார்.
இஃது அவரது முன்னை நடவடிக்கைகளைக் கொண்டு எடுக்கும் முடிவு,
மஹிந்தவின் கோபம் தமிழ்த்தலைவர்களோடு நிற்குமா?
அல்லது தமிழர்கள் மீதும் பாயுமா?
காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

★ ★ ★ ★

இன்றைய நிலையில், எதையும் உறுதியாய்ச் சொல்லமுடியாவிட்டாலும்,
தொடர்ந்து வரும் நாள்களில்,
சம்பந்தனாரின் முடிவு கூட்டமைப்பின் சரித்திரத்திற்கான அத்திவாரமா?
அல்லது சமாதிக்கான அத்திவாரமா? என்பதும் தெரியப்போகிறது.
ரணிலின் கை ஓங்கினால் சம்பந்தனார் 'ஹீரோ' வாகப் போகிறார்.
மஹிந்தவின் கை ஓங்கினால் சம்பந்தனார் 'வில்லனாக' போகிறார்.
அங்ஙனம் அவர் ஆகப்போவது,
ரணில், மஹிந்த இருவர்க்கும் மட்டுமல்ல, தமிழினத்திற்கும்தான்.
சம்பந்தனார் துணிந்து எடுத்து வைத்திருக்கும் அடி,
சறுக்கப் போகிறதா? சாதனையாகப் போகிறதா?
இப்படி ஆயிரம் ஆயிரம் கேள்விகள் அனைவர் மனங்களிலும்.
பதிலுக்காய் காத்து பதறி நிற்கின்றனர் தமிழ் மக்கள்.

★ ★ ★ ★

ஆனாலும் ஒன்று.
தற்போது சம்பந்தர் எடுத்திருக்கும் முடிவு ஜனநாயகம் சார்ந்தது என்பதில்,
ஐயத்திற்கு இடமில்லை.
வருங்கால, வெற்றி தோல்விகளைக் கணித்து,
சத்தியத்திற்கு மாறாகவோ, அல்லது இரண்டுங்கெட்டான் நிலையிலோ,
இருக்க நினைப்பது தலைமைக்கு அழகல்ல.
பல பிரச்சினைகளில் அங்ஙனமாய் இருந்த சம்பந்தனார்,
இம்முறை துணிந்து முடிவெடுத்துத் தலைநிமிர்ந்திருக்கிறார்.
எம்மைத் தலைநிமிர்த்தியும் இருக்கிறார்.
எனவே எதுவந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள,
கூட்டமைப்பும்தமிழினமும்தயாராகவேண்டியதுதான்.
நம்மிடம் ஒற்றுமை இருந்தால் எதிரியும் நண்பனாவான்.
ஒற்றுமை நீங்கின் நண்பனும் எதிரியாவான்.
இவ் உண்மையை கூட்டமைப்பினர் முதலில் தாம் உணர்ந்து,
பின் இனத்திற்கும் உணர்த்துவார்களாக!

★ ★ ★ ★

நாடாளுமன்றத்தில் நடந்துகொண்டிருக்கும்,
யுத்தக்காட்சிகளைப் பார்த்தபடியே இக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கிறேன்.
இலங்கை அரசியல் வரலாற்றில் நடக்காத சம்பவங்கள் எல்லாம்,
கட்சித்தலைவர்களின்கண்முன்னாலேயே நடந்து கொண்டிருக்கின்றன.
'கொலைகள்கூட நிகழலாம்' என உறுப்பினர்கள் கணிக்கும் அளவிற்கு,
இலங்கை அரசியலின் இழிநிலை சிகரம் தொட முனைந்து கொண்டிருக்கிறது.
நடக்கப்போகும்ஆபத்துத்தெரியாமல்தேசத்தைப் பிளவுபடுத்தும் வேலைகளை,
பேரினவாதஅரசியல்வாதிகள்செய்யத்தொடங்கிவிட்டனர்.
ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் மாறுபட்ட பலகுழுக்களும்,
தேசத்தை பாழ்செய்யும் இயல்பு கொண்ட,
உடனிருந்தே தீமை செய்யும் உட்பகையும்,
தலைவனை அலைவிக்கும் கொலைக்குறும்பரும் இல்லாத நாடே சிறந்த நாடு என்பார் வள்ளுவர்.
பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.
வள்ளுவர் வேண்டாம் என்றவை நம் தேசத்தில் வீறாய் விளையத் தொடங்கிவிட்டன.
தமிழினத்தின் மேல் அராஜகம் செய்து பழகிய ருசியில்,
பேரின அரசியல் தலைமைகள்,
இன்று தமக்குத்தாமே அதனைச் செய்யத் தொடங்கிவிட்டன.
இவர்தம் பலயீனத்தைப் பயன்படுத்தி,
இலங்கைத்தாயின் சுதந்திர மணிமுடியைப் பறிக்கும் ஆசையோடு,
எத்தனையோ நாடுகள் ஏங்கிக் கிடக்கின்றன.
சதோதரப் பகையால் துகிலுரியப்பட்ட பாஞ்சாலியைப் போலத்தான்,
இன்று இலங்கை அன்னையின் நிலையும்.
வாராவாரம் பரபரப்பான புதிய காட்சிகள் அரங்கேறிக்கொண்டிருக்கும் இலங்கையில்,
அடுத்தவாரம் என்ன நடக்குமோ? யாரறிவார்? ★

# கெஜ்ரிவால் மீது மிளகாய்த் தூள் வீச்சு



புதுடில்லி, நவ. 22

டில்லி தலைமைச்செயலகத்தில் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மீது மிளகாய்த்தூள் வீசித் தாக்குதல் நடத்தியவர் பிடிபட்டார் எனக் கூறப்படுகிறது.

டில்லி மாநில அரசின் தலைமைச் செயலகம் 3 மாடிகளைக் கொண்ட கட்டடத்தில் செயல்படுகிறது. அதன் 3ஆவது மாடியில் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அலுவலகம் உள்ளது. நேற்று முன்தினம் வழக்கம் போல கெஜ்ரிவால் அலுவலகம் வந்து தன் பணிகளைக் கவனித்தார். மதியம் சுமார் 2 மணிக்கு அவர் மதிய சாப்பாட்டுக்குச் செல்வதற்காக தனது அறையில் இருந்து வெளியே வந்தார்.

அப்போது முதலமைச்சர் அலுவலகத்துக்கு வெளியே பதுங்கி நின்ற ஒருவர் கெஜ்ரிவால் மீது மிளகாய்த் தூள் வீசித் தாக்குதல் நடத்தினார். இதில் அவரது மூக்குக் கண்ணாடி கீழே விழுந்து உடைந்தது. நல்ல வேளையாக மிளகாய்த் தூள் அவரது கண்களைப் பதம் பார்க்கவில்லை.

அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார், மிளகாய்த் தூள் வீசி தாக்குதல் நடத்திய அந்த நபரை பாய்ந்து சென்று பிடித்து விசாரணைக்கு கொண்டு சென்றனர் என்று கூறப்பட்டது. (ஐ)

# சுனாமி போன்றே கஜா புயலும் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது

## தேசிய பேரிடர் மீட்புக் குழு தெரிவிப்பு

சென்னை, நவ. 22

தமிழகத்தில் இதற்கு முன்னர் ஏற்பட்ட சுனாமியை போன்றுதான் கஜா புயலும் பாரிய பேரழிவை ஏற்படுத்தியுள்ளதாகத் தேசிய பேரிடர் மீட்புக் குழு தெரிவித்துள்ளது.

கஜா புயல் தமிழகத்தில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு தொடர்பில் பேரிடர் மீட்புக் குழுவின் அதிகாரி ராஜன், இந்திய தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது –

கஜா புயலால் பாரிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ள டெல்டா மாவட்டங்களில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை மற்றும் வட மாவட்டங்களில் இதற்கு முன்னர் ஏற்பட்ட வர்தா புயலால் சேதங்கள் குறைவு. ஆனால் கஜா புயலால் நாகை, கடலூர், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் 2004ஆம் ஆண்டு சுனாமி



தாக்கியது போன்ற மோசமான பேரழிவைதான் கஜா புயல் தற்போது ஏற்படுத்தியுள்ளது. இந்த கஜா புயலால் கடலோர மாவட்டங்களே அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மத்திய அரசின் முன்னெச்சரிக்கை செயற்பாட்டால் பெருமளவான உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இருப்பினும் 46 பேர் சுவர் இடிந்தும், மரங்கள் முறிந்து விழுந்தும் உயிரிழந்துள்ளனர் என ராஜன் தெரிவித்துள்ளார். (ஐ)

# புயலால் பாதிப்புற்ற இடங்களை பார்வையிட்டார் தமிழக முதல்வர்

சென்னை, நவ. 22

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களை தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

நேற்று முன் தினம் காலை 5.30 மணியளவில் சென்னையிலிருந்து, விமானத்தில் பயணமான தமிழக முதலமைச்சர், காலை 8 மணியளவில் திருச்சியைச் சென்றடைந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

அதிகளவு புயலினால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை, மச்சுவாடிப் பகுதிகளை அவர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகை ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்கள் ஆகியோரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கஜா புயல் இழப்பீட்டை 3 மடங்கு உயர்த்துங்கள்

## தமிழக அரசிடம் தினகரன் கோரிக்கை



சென்னை, நவ. 22

கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தமிழக அரசு அறிவித்த நிவாரண தொகை போதாது என அம்மா மக்கள் முன்னேற்ற கழக துணை பொதுசெயலாளர் டிடிவி. தினகரன் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இழப்பீட்டை 3 மடங்கு உயர்த்தி வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் மீனவர்களுக்கு கூடுதல் நிவாரணம் வழங்குமாறு வேண்டுகோள் விடுத்த டி.டி.வி தினகரன், மக்களை சந்திக்க ஆட்சியாளர்களுக்கு அச்சம் நிலவுவதாக விமர்சித்தார்.

# கடும் காற்று, கன மழையால் தமிழகம் தொடர்ந்து பாதிப்பு



சென்னை, நவ. 22

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் புதிதாக உருவாகியிருக்கும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியின் காரணமாகத் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

கஜா புயல் தமிழக பகுதியைக் கடந்த பிறகு, புதிதாக ஒரு காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் உருவானது. இந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி தமிழக கடலோரப் பகுதிகளை நெருங்கிவந்து, நிலை கொண்டுள்ளது.

இந்த தாழ்வுப் பகுதி மேலும் தமிழக, புதுச்சேரி கடலோரப் பகுதியை நோக்கி நகரக்கூடும் என்பதால், தமிழக கடலோர மாவட்டங்கள் அனைத்திலும் மிதமானது முதல் கனமழை வரை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சில இடங்களில் கன மழையோ, மிகக் கன மழையோ பெய்யும் வாய்ப்புள்ளது. இந்தக் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாறுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருக்கிறது.

கடந்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் தமிழகத்தின் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது. தமிழ்நாட்டிலேயே அதிகபட்சமாக செங்கோட்டையில் 8 செ.மீ. மழையும் மணிமுத்தாறில் 6 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

கஜா புயலால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், புதுக்கோட்டை பகுதிகளில் நேற்று விட்டுவிட்டு மழை பெய்தது.

இன்று பிற்பகல் வரை மன்னார் வளைகுடா பகுதிக்கும் தென்மேற்கு வங்கக் கடல் பகுதிக்கும் மீனவர்கள் செல்ல வேண்டாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்தியக் கடற்படைக்கு புதிய போர்க்கப்பல்கள்

## கட்டுவதற்கு ரஷ்யாவுடன் ஒப்பந்தம்



இந்தியா – ரஷ்யா நாடுகளின் ராணுவ ஒத்துழைப்பு கட்டமைப்பின் கீழ் இந்தியக் கடற்படைக்கு 3,500 கோடி ரூபா மதிப்பில் 2 போர்க்கப்பல்களைக் கட்டுவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்திய பொதுத்துறை நிறுவனமான கப்பல் கட்டுமான நிறுவனம் – ரஷ்யாவின் ரோசோபோன் எக்ஸ்போர்ட் ஆகியவற்றிற்கிடையே நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை டில்லியில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் கோவாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் 2 போர்க்கப்பல்கள் கட்டப்படவுள்ளன. இதற்கான வடிவமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் சில உபகரணங்களை ரஷ்ய நிறுவனம் அளிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கப்பல் கட்டும் பணி 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்றும் முதல் கப்பல் 2026 ஆம் ஆண்டுக்குள் இந்திய கடற்படையில் சேர்க்கப்படுவதோடு மற்றொரு போர்க்கப்பல் 2027 ஆம் ஆண்டு இணைக்கப்படும் என்றும் கோவா கப்பல் கட்டுமான நிறுவனத்தின் தலைமை அதிகாரி சேகர் மிட்டல் தெரிவித்துள்ளார். (ஐ)

# சட்டவிரோத அரசுக்கு எதிராக சாகும் வரை உண்ணாவிரதம்!

## ஐ.தே.க. பொதுச் செயலர் அறிவிப்பு



கொழும்பு, நவ. 22

அரசமைப்புக்கு முரணான வகையில் அரசு அமைக்கப்பட்டுள்ளதென்றும், அதற்கெதிராகச் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளார் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி யின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரிய வசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அதன் பிரகாரம் எதிர்வரும் 24ஆம் திகதி கண்டியிலும், 27ஆம் திகதி களுத்துறையிலும், டிசெம்பர் 3ஆம் திகதி கொழும்பிலும், டிசெம்பர் 4ஆம் திகதி கிரிபத்கொடயிலும் உண்ணாவிரதப் போராட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது அரசு ஒன்று இல்லையென்றும், அதனால் புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்களுக்கான செலவினங்களை அங்கீகரித்த அதிகாரிகளும் பதில் கூற வேண்டிவரும் என்றும் அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் பிரதமர் மாற்றம் ஏற்பட்ட பின்னர் ஜனாதிபதி மைத்திரியால் புதிய அமைச்சரவை அறிவிக்கப்பட்டது. எனினும், பெரும்பான்மையற்ற ஒரு தரப்பை அரசாக ஏற்றுக்கொள்ள முடியாதெனக் குறிப்பிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, ஏற்கனவே பல ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# மஹிந்த ஹெலியில் சபைக்கு வரக்கூடாது

## ஜே.வி.பியினர் போர்க்கொடி

கொழும்பு, நவ. 22

மஹிந்த ராஜபக்ஷ ஹெலிக்கொப்டரில் நாடாளுமன்றத்துக்கு வருவதை முதலில் நிறுத்தவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசு ஒன்று இல்லாத சந்தர்ப்பத்தில் பிரதமரால் வழங்கப்படும் உத்தரவுகளுக்கு ஏற்ப பணத்தைச் செலவு செய்ய முடியாது. பிரதமர் அல்லாத ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையில் இருந்து வெளியேற வேண்டும். பிரதமராகப் பதவியேற்ற நாளில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் நாடாளுமன்றத்திற்கு வருகை தருவதை மஹிந்த ராஜபக்ஷ நிறுத்தவேண்டும். ரணில் விக்கிரமசிங்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சலுகைகளை மாத்திரமே அவர்களால் பயன்படுத்த முடியும்–என்றார். (ஐ)

# பண மோசடியில் ஈடுபட்ட கான்ஸ்டபிள் சிக்கினார்

திருமணமான பெண்ணொருவருடன், தவறான தொடர்புகளைப் பேணி வந்து, அந்தப் பெண்ணிடமிருந்து, 50 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவைப் பெற்று மோசடியில் ஈடுபட்டார் எனக் கூறப்படும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காலி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பொலிஸ் நிலையத்துக்கு இணையாகச் சேவையாற்றிவரும் 34 வயதுடைய கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கான்ஸ்டபிள், வந்துரப பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய காலத்தில், அப்பகுதியைச் சேர்ந்த மூன்றுப் பிள்ளைகளின் தாய் ஒருவருடன் தொடர்புகளைப் பேணி வந்திருந்தார் என்றும், அச்சமயம் அந்தப் பெண்ணிடமிருந்து அவ்வப்போது பணம் பெற்று வந்துள்ளாரெனவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில், பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# வேம்படி மகளிர் கல்லூரியில் நஷ்டஈடு வழங்கும் நிகழ்வு

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில்

யாழ்ப்பாணம், நவ. 22

யுத்தம் மற்றும் வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக் கான சொத்துக்கள் மற்றும் உயிரிழப்புக்களுக்கான நஷ்டஈட்டுத் தொகை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்ததலைமையில்நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நஷ்டஈடு பெற தெரிவு செய்யப்பட்டவர்கள் அனைவரும் தவறாது சமுகமளித்து இழப்பீட்டுக்கான காசோலைகளை பெற்றுக் கொள்ளுமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாகச் செயலாளரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வடக்கு மாகாண இணைப்பாளருமான கா.வேலும் மயிலும் குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

25ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறும்.

## சாயி நிலையத்தில் வெள்ளியன்று பகவானின் அவதார தின விழா

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்ப்பாணம் சேர் .பொன் .இராமநாதன் வீதி, பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, பகவானின் 93 ஆவது அவதார தின விழா மிகச் சிறப்பாக கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

காலை 8.30 மணிக்கு வழமையான நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும் விழாவில் முற்பகல் 10.45 மணிக்கு 'இசை அர்ப்பணம்', தொடர்ந்து 11.30 மணிக்கு யாழ். செயலக உதவி மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சன் சிறப்புரை ஆற்றுவார். 12.35 மணிக்கு மதிய போசனம். பிற்பகல் 2 மணிக்கு 'வாத்திய இசை சங்கமம்' நிகழ்வுடன் மாலை நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து 2.45 மணிக்கு 'சங்கீர்த்தன் சாரம்' நாடகம் – நிலைய இளைஞர்கள். 3.30 மணிக்கு 'உலக அமைதிக்கான பகவானின் போதனைகள்' சிறப்புரை: வைத்தியர்பு. சாயிபிரசாந்தன்(மாவட்ட வைத்தியசாலை – வவுனியா). 4 மணிக்கு சேவைகளின் தொகுப்பு காட்சிகள். மாலை 5.30 மணிக்கு மகா மங்களாரத்தி இடம்பெறும். (இ)

# நாலக்க டீ சில்வாவின் விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க டீ சில்வா, அடுத்த மாதம் 05 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாலக்க டீ சில்வா, கோட்டை நீதவான் ரங்க திசாநாயக்க முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோதே, அவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஐ)

## யாழ்.மாநகர சபை அமர்வுக்குச் செல்லத் தடை;

# சட்டத்தரணி மணிவண்ணன் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நேற்று ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்ப்பாண மாநகர சபை அமர்வில் தாம் பங்கேற்க மேன்முறையீட்டு நீதிமன்றால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு வரும் ஜனவரி 8ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த மேன்முறையீட்டு மனுவை அடிப்படை உரிமைகள் மற்றும் நிர்வாகச் சட்ட வல்லுநரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சஞ்சீவ ஜெயவர்த்தன தாக்கல்செய்திருந்தார். அவரின் சகோதர உறவுமுறையான உயர் நீதிமன்ற நீதியரசர் பிரசன்ன ஜெயவர்த்தன இந்தமனுமீதானவிசாரணையின் அமர்வில் பங்கேற்றிருந்தார். அதனால் இந்த வழக்கிலிருந்து விலகிக் கொள்கிறார் என நீதியரசர் பிரசன்ன ஜெயவர்த்தன அறிவித்தார். அதனால் மனுவை எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதிவரை உயர் நீதிமன்ற அமர்வு ஒத்திவைத்தது.

அத்துடன், எதிர்மனு தாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று மன்றில் முன்னிலையாக முடியாத காரணத்தால் அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிநிரான் அங்கிட்டல் வேறொரு திகதியைக் கோரியிருந்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கக் கட்டளையிடுமாறு கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப் பேராணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. யாழ்ப்பாண மாநகர சபை எல்லையில் வதியும் வாக்காளர் ஒருவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியாத ஒருவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டமை உள்ளூராட்சி தேர்தல் விதியை மீறும் செயல் என மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கி கட்டளையிடவேண்டும் என மனுதாரர் கோரியிருந்தார்.

மனு தாரர் கோரிய இடைக்கால நிவாரணங்களில் ஒன்றான, மனு மீதான விசாரணை நிறைவடைந்து கட்டளையிடும் வரையாழ்ப்பாணமாநகரசபைஅமர்வுகளில் பங்கேற்க உறுப்பினர் வி.மணிவண்ணனுக்குத் தடை உத்தரவு வழங்கவேண்டும் என்பதை ஏற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட்டில் இடைக்காலக் கட்டளை வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் இடைக்காலத் தடை உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவித்தே மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் சார்பில் மேன்முறையீட்டு மனு உயர் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது. இந்த மனு நேற்றுப் புதன்கிழமை உயர் நீதிமன்றால் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பிரசன்ன ஜெயவர்த்தன, எல்.டி.பி தெகிதெனிய, முர்டு பெர்னான்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன் அதுவிசாரணைக்கு வந்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தன, மன்றில் முன்னிலையானார். மனுதாரர் சார்பில் அவர் மன்றில் சமர்ப்பணத்தை முன்வைத்தார். இந்த நிலையில் மனு மீதான விசாரணை வரும் ஜனவரி 8ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்தியா தொடர்ந்தும் முதலிடம்



சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள டெஸ்ட் போட்டிகளுக்கான அணிகளின் தரவரிசையில் இந்திய அணி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

வாரந்தோறும் சிறப்பாக விளையாடும் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டு வருகிறது. அதன்படி, இந்த வாரத்திற்கான தரவரிசைப் பட்டியல் நேற்று முன் தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் எந்த அணியும் எளிதில் தொட்டுவிடாத வகையில், இந்தியா அணி 116 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. 106 புள்ளிகளைப் பெற்றுள்ள தென்னாபிரிக்கா அணி 2ஆவது இடத்தில் உள்ளது. ஒரு புள்ளிகள் பின் தங்கிய நிலையில், 105 புள்ளிகளுடன் இங்கிலாந்து 3ஆவது இடத்தில் உள்ளது.

தற்போது, இலங்கை அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி விளையாடி வருகிறது.

முதல் டெஸ்டில் 211 ஓட்டங்கள் வித்தி யாசத்திலும், 2ஆவது டெஸ்டில் 57 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது. இந்நிலையில் அவ்வணி 3ஆவது போட்டியிலும் வெற்றி பெற்றால், தென்னாபிரிக்காஅணியை பின்னுக்குத் தள்ளி தரவரிசையில் 2ஆவது இடத்தை பிடிக்கலாம்.

இந்நிலையில் டெஸ்ட் போட்டிக்கான துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசைப் பட்டியலைப் பொறுத்தவரை, முதல் 9 இடங்களுக்குள் எந்த மாற்றமும் இல்லை.

ஆனால், சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இரட்டை சதம் அடித்து அசத்திய பங்களாதேஷ் வீரர் முஷ்பிகுர் ரஹ்மான், 13 இடங்கள் முன்னேறி 19 ஆவது இடத்திற்கு வந்துள்ளார். இதுவே, அவரின் சிறந்த தரவரிசையாக இருக்கிறது.

இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி, 935 புள்ளிகளுடன் முதலிடத்திலும், 910 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் 2ஆவது இடத்திலும், 875 புள்ளிகளுடன் நியூசிலாந்தின் கேன் வில் லியம்சன் 3ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான திமுத் கருணாரத்ன 7 ஆவது இடத்தி லும், தினேஷ் சந்திமால் 10 ஆவது இடத்திலும் நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய அணியை வீழ்த்திய சுவீடன்



யு.ஈ.எப்.ஏ. நேசன்ஸ் லீக் உதைபந்துத் தொடரில், லீக் போட்டியொன்றில், சுவீடன் அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

லீக் டீ, குழு இரண்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் சுவீடன் அணியும், ரஷ்யா அணியும் மோதிக்கொண்டன.

பிரண்ஸ் எரினா - சோல்னா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், ஆரம்பமே சுவீடன் அணியினர் ஆக்ரோமாக விளையாடினர். போட்டியின் 41ஆவது நிமிடத்தில் சுவீடன் அணியின் வீரரான விக்டர் லிண்டலோப், அணிக்காக முதல் கோலை பெற்றுக் கொடுத்து இரசிகர்களை இன்ப வெள்ளத்தினால் ஆழ்த்தினார்.

இதனையடுத்து, ரஷ்ய அணியினர் பதில் கோல் போட, கடுமையாக முயற்சித்தும் அது பலனளிக்கவில்லை. இதனால் முற்பாதியில் சுவீடன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலைப் பெற்றது.

இதனைதொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதி நேரத்தில், ரஷ்யா அணி வீரர்கள் சிறப்பாக செயற்பட்ட போதும், 72ஆவது நிமிடத்தில் அந்த வாய்ப்பு சுவீடன் அணிக்கு கிடைத்தது. அந்த கோலை மார்கஸ் பெர்க், அடிக்க சுவீடன் அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை பெற்றது.

மேற்கொண்டு இரு அணிகளால் முயற்சித்தும் கோல் போட முடியவில்லை. இதனால் போட்டியின் இறுதியில் சுவீடன் அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

# டோனி 20 வயதில் செயற்பட்டமையை தற்போது எதிர்பார்ப்பது தவறானது



இந்தியக் கிரிக்கெட் அணியின் மூத்த வீரரான மகேந்திர சிங் டோனி, 20 வயதில் செயற்பட்டமை போல் தற்போதும் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது, தவறானது என அணியின் முன்னாள் தலைவரான கபில்தேவ் கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணிக்கு முதல் முறையாக உலகக்கிண்ணத்தை பெற்றுக் கொடுத்த மகத்தான வீரரான கபில் தேவ், டோனியின் எதிர்காலம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்– 'டோனி மிகவும் அனுபவம் வாய்ந்த வீரர். அவரது அனுபவம் அணிக்கு உதவும் என்றால், டோனியின் வேலை சரியானது. ஆனால், ஒவ்வொருவரும் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, டோனிக்கு தற்போது வயது 20 இல்லை.

மீண்டும் அவரால் 20 வயதிற்குச் செல்ல முடியாது. ஆகையால், அவரால் அணிக்கு எவ்வளவு ஓட்டங்களை சேர்க்க முடியுமோ, அதை செய்வார். அவர் அணிக்கு மிகப்பெரிய சொத்து. அவரது உடற்தகுதி மட்டுமே முக்கியமானது. டோனி மேலும் அதிக போட்டிகளில் விளையாட வாழ்த்துகிறேன்.

டோனி எந்த வேலை செய்திருந்தாலும் அதை சிறப்பாக செய்துள்ளார். ஆனால், அவர் 20 வயதில் செய்ததை தற்போதும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறானது. 20 வயதில் செய்ததை தற்போது செய்ய இயலாது. - என கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணிக்கு உலகக்கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம், ஆசியக் கிண்ணம், ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணம் என பல வெற்றிக்கிண்ணங்களை வென்றுக் கொடுத்த டோனி, தற்போது ரி-20 அணியிலிருந்து ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

இதனை மெய்ப்பிக்கும் வகையில் நடைபெற்ற விண்டீஸ் அணிக்கெதிரான ரி-20 தொடர், எதிர்வரும் அவுஸ்ரேலியா அணிக்கெதிரான ரி-20 தொடர்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதனால் அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிவிற்கு வந்துள்ளதாக கூறப்படுகிறது. எனினும் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலேயே அவரே முன்வந்து அணியிலிருந்து ஓதுங்கியதாகவும் கருத்துக்கள் வெளிவருகின்றன.



# பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் வில்லியர்ஸ்

கிரிக்கெட் உலகில் 360 டிகிரி என புகழப்பட்ட தென்னாபிரிக்காவின் ஏ.பி. டி வில்லியர்ஸ், பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடரில் விளையாடவுள்ளார்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் புகழ் பூத்த வீரரான ஏ.பி. டி வில்லியர்ஸ், கடந்த மே மாதம், 23ஆம் திகதி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து, ஓய்வு பெற்றார்.

இதன் பிறகு, தனித்துவமான கிரிக்கெட் தொடர்களில் மட்டும் விளையாடுவதாக அறிவித்தி ருந்த டி வில்லியர்ஸ், இதற்கமைய அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடரில் விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடருக்கான ஏலம் நேற்று முன் தினம் நடைபெற்றிருந்தது.

இதில் பிளாட்டினம் பிரிவில் இடம்பிடித்திருந்த ஏ.பி. டி வில்லியர்சை, லாகூர் குவாலண்டர்ஸ் அணி ஏலத்தில் வாங்கியது.

டி வில்லியசிற்கு, ஒரு இலட்சத்து 40 ஆயிரத்தில் இருந்து இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்கள் வரை சம்பளம் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

78 சர்வதேச ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ள ஏ.பி. டி வில்லியர்ஸ், 10 அரை சதங்கள் அடங்களாக 1672 ஓட்டங்களை குவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ள பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடரில், ஆறு அணிகள் பங்கேற்றின்றன. மொத்தம் 34 போட்டிகள் நடைபெறுகின்றன.

எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகும் இத்தொடர், மார்ச் மாதம் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் வார ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமான நிலையில் பொலிஸாரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கோப்பாயில் 512ஆவது படைத் தலைமையகம் உள்ள காணிக்கு (மாவீரர் துயிலும் இல்லம்) எதிரே உள்ள வீரசிங்கம் சிறிதரன் என்பவருடைய காணியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் என்பவரால் இது நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த பயங்கரவாதத் தடைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும்.

அந்த அமைப்பில் இருந்து உயிரிழந்த உறுப்பினர்களை நினைவு கூருவதற்காக நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

எனவே இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழ் வெறுப்பைத் தூண்டுதல் அல்லது எத்தனித்தல் என்ற ஏற்பாடுகளின் கீழ் நிகழ்வுக்குத் தடை உத்தரவு வழங்க வேண்டும்.

அத்துடன், நிகழ்வில் தடை செய்யப்பட் பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடிகள், இலச்சினைகள் என்பவையும் பயன்படுத்த தடை உத்தரவை மன்று வழங்கவேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று பிற்பகல் மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் மன்றில் தோன்றினார். எனினும் வழக்கை பின்னர் கூப்பிடுவதாக மன்று அறிவித்ததால் அவர் நீதிமன்றிலிருந்து வெளியேறினார்.

பின்னர் மனு மீளவும் அழைக்கப்பட்டபோது பொலிஸார் சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

கோப்பாயில் இராணுவத்தின் 512ஆவது படைத்தளம் அமைந்துள்ள (மாவீரர் துயிலும் இல்லம்) காணிக்கு முன்பாக உள்ள சிறிதரன் என்பவருடைய காணி துப்புரவு செய்யப்பட்டுள்ளது. அங்கு மாவீரர் நாள் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்திலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. அது தொடர்பில் எமக்கு ஆட்சேபனை இல்லை என்று கோப்பாய் பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தனர்.

மனுவில் எதிர்மனுதாரர் தொடர்பில் குறிப்பிடப்படவில்லையே? என்று மன்று கேள்வி எழுப்பியது.

எந்த நபர் மீதும் குற்றச்சாட்டு இல்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலிஸாரின் சமர்ப்பணத்தை ஆராய்ந்த நீதிமன்று நாளை வெள்ளிக்கிழமை கட்டளை வழங்குவதாக மனுவை ஒத்திவைத்தது.

இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவை 120 ஆம் பிரிவின் கீழ் வெறுப்பைத் தூண்டுதல் அல்லது எத்தனித்தல் என்ற வியாக்கியனத்தின் கீழ் இந்த மனுவைப் பொலிஸார் தாக்கல் செய்துள்ளனர்.

2011ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த பயங்கரவாதத் தடைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும். அந்த அமைப்பில் இருந்து உயிரிழந்த உறுப்பினர்களை நினைவு கூருவதற்காக நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடுக்கும் வகையில் கட்டளை வழங்கவேண்டும் என்று பொலிஸார் மனுவில் கோரியுள்ளனர். (ஐ-07)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன மற்றும் சர்ச்சைக்குரிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின், அரசமைப்புக்கு எதிரான அரசியல் சதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வண.தம்பர அமில தேரர் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

கொழும்பு, விகாரமாதேவி பூங்காவில் உள்ள புத்தர் சிலைக்கு எதிரே அவர் இந்தப் போராட்டத்தில் களமிறங்கியுள்ளார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தப் போராட்டத்தில் பௌத்த தேரர்கள், சிவில் சமூகத்தினர், வணிகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## ஐ.தே.கவினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவின் பிரதமர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை ரத்துச் செய்வதற்கான பிரேரணையை கடந்த 19ஆம் திகதி சபாநாயகரிடம் கையளித்திருந்த நிலையில், அடுத்த கட்டமாக அமைச்சர்களின் செயற்பாட்டை முடக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதாகச் சபாநாயகர் அறிவித்துள்ளார். அரசியலமைப்பின் 148 ஆவது பிரிவின் கீழ் நாடாளுமன்றமே அரச பொது நிதியைக் கட்டுப்படுத்துகிறது.

எனவே, கடந்த 15ஆம் திகதிக்குப் பின்னர், அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களும், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அவர்களின் அதிகாரிகளுக்கான ஊதியத்தை பொது நிதியில் இருந்து வழங்குவதற்கு அதிகாரம் இல்லை.

அத்துடன் அரச பொது நிதியில் இருந்து வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவோ, உள்நாட்டில் உலங்கு வானூர்திகளில் பயணிக்கவோ முடியாது. இதனை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அந்தப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, ரவி கருணாநாயக்க, சம்பிக்க ரணவக்க, அர்ஜுன ரணதுங்க, மனோ கணேசன், ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் இந்த பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளனர்.

### ஒழுங்குப் பத்திரத்தில் சேர்ப்பு

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவின் வசமுள்ள பிரதமர் செயலகத்துக்கான, நிதி ஒதுக்கீடுகளை ரத்துச் செய்வது தொடர்பாக, ஐ.தே.கவினரால் முன்வைக்கப்பட்ட பிரேரணை எதிர்வரும் 29ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கடந்த 19ஆம் திகதி சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த பிரேரணை எதிர்வரும் 29ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் வகையில் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## சம்பந்தனைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் அவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுகிறோம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நடந்துகொண்ட விதம் தொடர்பில் நேற்றுப் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாம் நாடாளுமன்றில் அன்று நடந்துக்கொண்ட விதம் தொடர்பில் இப்போது விமர்சிக்கிறார்கள். ஆனால், நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு முரணாகக் கொண்டுவரப்படவிருந்த பிரேரணையொன்றை தடுக்கும் வகையிலேயே நாம் அவ்வாறு செயற்பட்டோம்.

இதற்கு முன்னரும் இதனை விட மோசமான செயற்பாடுகள் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் என்றாவது ஒரு நாளேனும் தெற்கு மக்களின் பிரச்சினை தொடர்பில் பேசியுள்ளாரா? – இல்லை. தேசிய சொத்துக்களைச் சர்வதேசத்துக்கு விற்பனை செய்யும் அரசின் செயற்பாட்டைக் கண்டித்துள்ளாரா – இல்லை.

மாறாக, அவர் எதிர்க்கட்சித்தலைவராகப் பொறுப்பேற்றக் காலம் முதற்கொண்டு சமஷ்டியை மட்டும்தான் கோரிக்கொண்டிருக்கிறார். இதனை நாம் தவறு என்று ஒருபோதும் கூறிவிட முடியாது. அவர் தனது மக்களுக்காக தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துகொண்டு செயற்படுகிறார்.

இவ்வாறானதொரு செயற்பாட்டைத் தான் நாமும் மேற்கொண்டோம். எனவே, இந்த நாட்டை யார் ஆட்சி செய்யவேண்டும் என்பதை இந்த நாட்டு மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இதற்காகவே, நாம் பொதுத் தேர்தலுக்குச் செல்லுமாறு இவர்களை வலியுறுத்துகிறோம் – என்றார். (ஐ)

## நாடாளுமன்றக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமையும் மூடப்படும் என படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அமர்வின்போது 7 நிமிடங்களே நடைபெற்ற நாடாளுமன்றம் நாளை வெள்ளிக்கிழமை 10.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வுக்கும் பார்வையாளர் பகுதி மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இரத்தினக்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடுவதற்கான பேச்சுக்கள் இடம்பெறுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கிய பிரிவு ஒன்றும் இந்த கூட்டணியில் இணைந்துக் கொள்ளவுள்ளது.

ராஜித சேனாரத்ன மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் சுயாதீனமான உறுப்பினர்களாக இந்தக் கூட்டணியில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் தேர்தலின் பின்னர் ஜே.வி.பியும் கூட்டணியில் இணைத்துக் கொள்ளப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக ஏனைய கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றபோதும், இன்னும் இறுதித் தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லை. (ஐ)

## சதிகாரர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு கட்டுவோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சியமைக்கும். இது உறுதி.

– இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் மூன்று தடவைகள் போலிப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷக்கு எதிராகவும், அவர் தலைமையிலான 'காட்போட்' அமைச்சரவைக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம். 122 எம்.பிக்கள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளித்தும் அது தொடர்பில் அலட்டிக்கொள்ளாமல் மைத்திரியும், மஹிந்தவும் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார்கள். நாட்டு மக்களின் நலனைப் பற்றி சிறிதளவும் சிந்திக்காமல் அவர்கள் சண்டித்தனம் காட்டுகின்றார்கள். இந்த ஆட்டம் எல்லாவற்றையும் சில தினங்களுக்குள் அடக்குவோம். ஆட்சிப்பீடம் ஏறி ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம் – என்றார். (ஐ)

## தாயகமெங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பில் இருந்து போராடி வீரகாவியமான மாவீரர்களை நினைவு கூர்ந்து தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் நவம்பர் 21 முதல் 27 வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இதன் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்றுப் பல இடங்களிலும் நடந்தன. அத்துடம் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் மாவீரர் வார ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றுக்காலை மாவீரர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி மாவீரர் வார ஆரம்ப நிகழ்வுகள் நடந்தன.

கடந்த முறையை விட இம்முறை மிகவும் உணர்வெழுச்சியுடன் நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் அரசியல் நெருக்கடி நிலை மோசமடைந்துள்ள நிலையிலும் மாவீரர் வாரத்தை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் தடையின்றி இடம்பெற்று வருகின்றன. (ஐ)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

அவ்வாறு கூறுகிறவர்கள் தங்களின் மாற்று திட்டம் என்ன? அதனால் தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் நன்மை என்ன? என்பதையும் கூறட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்–

நாடாளுமன்றில் இன்று ஐ.தே.கட்சி 105 ஆசனங்கள் வைத்திருக்கின்றது. அதேபோல் பொதுஜன பெரமுன 96 ஆசனங்களை வைத்திருக்கின்றது. ஆக மொத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்காவிட்டாலும் கூட ஐ.தே.கட்சி அதிகபடியான ஆசனங்களை வைத்திருக்கின்றது.

ஏதோ மஹிந்த பெரும்பான்மையைப் பெற்றுவிடப்போகிறார், ஆகவே ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக ஐ.தே.கட்சிக்கு ஆதரவளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிக்காட்ட நினைக்கிறது.

மஹிந்த, ரணில், மைத்திரி ஆகிய 3 பேரும் தமிழர்களால் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள். அந்த நிராகரிக்கப்பட வேண்டியவர்களில் ஒருவருக்கு ஆதரவளிப்பதுடன், அவரை காப்பாற்றி அரசின் அங்கமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள். எம் மீது முன்வைக்கும் விமர்சனங்கள் குறித்து மக்கள் தெளிவாக இருக்கவேண்டும் – என்றார். (ஐ)

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி., ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுடன் சந்திப்பை மேற்கொள்வது சுவாரஸ்யமாக உள்ளது. இந்தக் கட்சிகள் தங்கள் மக்கள் மற்றும் சமூகத்தவர்களைச் சந்திப்பது குறித்து அதிக அக்கறை செலுத்தினால், தேர்தலுக்கான மக்களின் எதிர்பார்ப்பைச் செவிமடுத்தால். இலங்கை நன்மையடையும் என நாமல் ராஜபக்ஷ டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்துக்குப் பதிலளித்த இலங்கைக்கான கனடாத் தூதுவர் நீங்கள் உங்கள் பொதுஜன பெரமுன கட்சியின் பிரமுகர்கள் சிலர் யாரைச் சந்திக்கின்றனர் என்பதை அவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மீண்டும் பதிலளித்த நாமல் ராஜபக்ஷ இலங்கை ஒரு இறையாண்மை நாடாகவும் மக்களின் சிறந்த உறைவிடமாகவும் காணப்படுகின்றது. அந்த இறையாண்மையை பேணுவது அனைத்து தலைவர்களின் கடமையாகும், இதில் தேர்தலும் அடங்கும். – என கூறியுள்ளார்.

## பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்ட வசந்த சேனநாயக்க நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டமையை அடுத்து கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீக்கியகையோடு, மஹிந்தவை ஆதரித்து அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டார் வசந்த சேனாநாயக்க.

எனினும், நாடாளுமன்றத்தில் கடந்த 14 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் மீண்டும் ஐ.தே.கவில் இணைகிறார் என அவர் அறிவித்தார். அமைச்சுப் பதவியைத் துறக்கும் அறிவிப்பையும் விடுத்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவிருந்த சமயம் அவர் ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்றிருந்தார். ஆனால், அண்மையில் தாம் ஏற்ற அமைச்சர் பதவிலிருந்து தாம் விலகுகின்றார் எனத் தெரிவிக்கும் இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் நேரில் சமர்ப்பிப்பதற்காகவே அவர் நேற்று அங்கு சென்றார் எனப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி மஹிந்தவின் அமைச்சரவையிலிருந்து மைத்திரி வெளியேறிய பின்னர், அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வசந்த சேனாநாயக்கவும் வெளியேறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ.தே.கவைக் காப்பாற்றுவதற்கே நீதிமன்று சென்றது கூட்டமைப்பு

## சாடுகின்றார் கஜேந்திரன்



யாழ்ப்பாணம், நவ. 22

தமிழ் மக்களின் பிரச்சினைக்காக நீதிமன்றத்துக்கு செல்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சியைக் காப்பாற்றுவதற்காக நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பதவி மற்றும் நாடாளுமன்ற குழுக்களின் தலைவர் பதவி என்பவற்றுக்கும் தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்ற கருத்து என்பது ஒரு பொறுப்பற்ற கருத்தாகவே நாம் பார்க்கின்றோம்.

அதிலும் தேர்தல் காலத்தில் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்போம், இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்துவோம், போர்க்குற்றவாளிகளைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவோம் என்று கூறினர். அதே போன்று சிங்களக் குடியேற்றங்கள், அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றுக்கு எல்லாம் தற்போது என்ன நடந்தது? இவற்றில் எதனை மக்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளனர்?

அப்போது எல்லாம் இவர்கள் நீதிமன்றம் செல்லவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றபோது நாடு நெருக்கடியில் இல்லையா? இப்போது ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு நெருக்கடி என்றவுடன் தான் நீதிமன்றம் செல்லுகின்றனர். நாடாளுமன்றத்திலும் சர்வதேசத் தரப்பினர்களுக்கும் இது குறித்து விளக்கமளிக்கின்றனர். ஆகவே இவர்களது செயற்பாடுகள் என்பது ஐக்கிய தேசியக் கட்சியைக் காப்பாற்றுவதாகவும் தங்களது தவறுகளை மறைத்து, தமிழ் மக்களை ஏமாற்றி, ஆட்சியாளர்களுக்கு வெள்ளையடிப்பதாகவே காணப்படுகின்றன – என்றார். (ஐ-07)

## 179 ரூபாவைத் தாண்டியது அமெ. டொலரின் பெறுமதி

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலையின் பெறுமதி படி, இலங்கை ரூபாவின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன்படி நேற்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 179.04 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. (ஐ)

## உலக மீனவர் தினம் பூநகரியில்

கிளிநொச்சி, நவ. 22

'எமது எதிர்காலம் எமது கையில்' எனும் தொனிப்பொருளில் உலக மீனவர் தினம் நேற்றுப் பூநகரியில் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலை வாழ்வாதரமாகக் கொண்ட குடும்பங்களை மையப்படுத்தி, அவர்களுடைய வாழ்வாதார வளர்ச்சி தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கடலை அடிப்படையாகக் கொண்ட தொழில்களில் குழுக்களாகச் சிறப்பாக இயங்கி வரும் ஆண்கள் மற்றும் பெண்கள் அடங்கிய மீனவர் குழுக்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண நீரியல் வளத்துறை உதவி இயக்குனர் நிருபராஜ், யாழ் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் திருமதி.சுரேஸ், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள், கிராம அலுவலகர், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## ஜோசப் எம்.பி. கொலை வழக்கு: பிள்ளையானின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, நவ. 22

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் அவர் நேற்று விடுதலை செய்யப்படுவார் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவருக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்றக் கட்டடத்தொகுதிக்கு முன்னால் பிள்ளையானின் கட்சி உயர்பீட உறுப்பினர்கள், பொது மக்கள், ஆதரவாளர்கள் காத்திருந்தனர். இருப்பினும் அவரது விளக்கமறியலை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரையும் நீடித்து நீதவான் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைச் சம்பவத்தில், குற்றம் சுமத்தப்பட்டு, கடந்த 2015 ஆம் ஆண்டு 10 ஆம் மதம் 11 ஆம் திகதி பிள்ளையான் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சபாநாயகரின் கொடும்பாவியை எரித்து மஹிந்த தரப்பு எதிர்ப்பு



சபாநாயகர் கருஜயசூரிய கட்சி சார்பாக செயற்படுகிறார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராக மஹிந்த அணியினர் கண்டி – பூஜாபிட்டிய நகரில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில், சபாநாயகரின் கொடும்பாவி எரிக்கப்பட்டு – எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

அதேவேளை, பொதுத்தேர்தலை உடனடியாக நடத்துமாறும் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர். ஐக்கியதேசியக்கட்சியின்செயற்பாடுகளையும் வன்மையாகக் கண்டித்தனர்.

இப்போராட்டத்தால் பூஜாபிட்டிய நகரில் சிறிதுநேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பாதுகாப்பும் வழமையைவிட பலப்படுத்தப்பட்டிருந்தது. (ஐ)

## இரணைமடுக் குளம் குறித்து வதந்திகளை நம்பவேண்டாம்



இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படப்போகின்றன எனக் கூறப்படும் வதந்திகளை நம்பவேண்டாம் என நீர்பாசனப் பொறியியலாளர் எந்திரி சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது மழை வீழ்ச்சி குறைந்து காணப்படுவதால் இரணைமடு குளத்தின் நீரேந்தும் பகுதிகளில் இருந்து வரும் மழை நீர் குறைந்து வருவதனால் வான் கதவுகள் திறக்கப்படமாட்டாது.

இரணைமடு குளத்தில் தொடர்ந்து கண்காணிப்புகள் இடம்பெற்று வருகின்றன. குளத்தில் நீர் 32.11 அடி இருப்பதனால் 36 அடி வரைக்கும் சேமிக்க முடியும் என்ற காரணத்தால் வான் கதவுகள் திறப்பதற்கு அவசியமில்லை. வானிலையில் தாழமுக்கம் எதுவும் ஏற்பட்டால் குளத்தின் நீர் உயர்ந்து 36 அடி வந்தால் வான் கதவுகள் திறக்கப்படும் – என்றார். (ஐ)

## பாவற்குளத்தின் நீர்மட்டம் உயர்வு



வவுனியாவில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழை காரணமாகப் பாவற்குளத்தின் நீர்மட்டம் 16.11 அடியாக உயர்வடைந்துள்ளதுடன், ஈரப்பெரியகுளம் வான் பாய்ந்து வருவதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியாவில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழை காரணமாக நீர்வரத்து அதிகரித்துக் குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதுடன், சில குளங்கள் வான் பாய ஆரம்பித்துள்ளன.

மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் காணப்படும் வவுனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் 16.11 அடியாக உயர்வடைந்துள்ளது. அத்துடன் இராசேந்திரங்குளம் 9.9 அடியாகவும், முகத்தான்குளம் 11 அடியாகவும் உயர்வடைந்துள்ளன. தொடர்ச்சியாக மழை பெய்யும் பட்சத்தில் சில நாள்களில் இவை வான் பாயக் கூடிய நிலை உள்ளது.

இவற்றுடன், மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள ஈரப்பெரியகுளம் 15.7 அடியாக உயர் வடைந்துள்ளமையால் வான் கதவுகள் திறக்கப்பட்டு 3 இஞ்சி வான் பாய்ந்து வருகிறது. வவுனியா வடக்கு மருதமடுக் குளம் 12.1 அடியாக நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதால் வான் பாய்ந்து வருகின்றது.

இந்த நீர்மட்ட அதிகரிப்பு காரணமாக குளங்களின் கீழ் உள்ள மக்களுக்கோ, பயிர்செய்கைக்கோ எந்த வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. அத்துடன் அனர்த்தம் ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மாவட்ட மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது – என்றார். (ஐ-100)

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

யாழ். சிறுவர் நீதிமன்றுக்கு அருகில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ். கொய்யாத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய விமலதாஸ் ஜோசப் ஜெபர்சன் என்பவரே சிறுவர் நீதிமன்றத்துக்கு அருகில் உள்ள வீட்டில் இருந்து சடலமாகப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

கடற்றொழில் செய்யும் இவர், இந்த வீட்டுக்குச் சென்று அங்கு உறங்கிய உள்ள நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அந்தப் பகுதிக்குச் சென்ற நபர்கள் இவர் சடலமாகக் கிடப்பதைக் கண்டு யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இந்தத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை மீட்டமையுடன் சடலம் தொடர்பான விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.